Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, FEBRUARY 13, 2023

திங்கட்கிழமை, பெப்ரவரி 13, 2023 | ஒளி: 08 கதிர் 207 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

துருக்கி நிலநடுக்கம்

## இலங்கையரின் சடலம் மீட்பு

கடந்த 6 ஆம் திகதி துருக்கியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தைத் தொடர்ந்து காணாமற்போன இலங்கைப் பெண்ணின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக துருக்கியில் உள்ள இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது. தொடர்ச்சி P2



## தோணி மூழ்கியதில் ஆசிரியர் உட்பட 3 மாணவர்கள் பலி

வ.சக்தி

மட்டக்களப்பு மாவட்டம் கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள தாத்தாமலை நான்பது வட்டை குளத்திலிருந்து தனியார் கல்வி நிலையம் ஒன்றின் ஆசிரியர் ஒருவர் உட்பட 3 மாணவர்களின் சடலம் மீட்கப்பட்டடுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். களுமுந்தன்வெளி கஜமுகன் கல்வி நிலையத்தில் கல்வி கற்கும் ஆசிரியர்களும், இம்முறை கல்வி பொதுத் தராதர சாதாரண தரம் எழுதவிருக்கும் மாணவர்களும், தொடர்ச்சி P2



## 2 நாட்கள் நடுங்கிய நிலம் நேற்று நடுங்கவில்லை

சுமணசிறி குணதிலக்க

புத்தல பிரதேச செயலாளர் பிரிவின் பல கிராமங்களில் சனிக்கிழமை (11) நிலநடுக்கம் ஏற்பட்ட நிலையில், ஞாயிற்றுக்கிழமை (12) நிலநடுக்கம் ஏற்படவில்லை என்று மொனராகலை அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ஏ.எச்.ரவீந்திர குமார தெரிவித்தார். தொடர்ச்சி P2

# 13 ஆவது திருத்தம் எலும்புக்கூடு




### தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கம் தெரிவிப்பு

### வாக்கெடுப்பை அமெரிக்காவோ, ஐ.நாவோ கண்காணிக்க வேண்டும்

க.அகரன்

நமது நாட்டில் உள்ள இந்திய தமிழ் முகவர்கள் 13ஆவது திருத்தத்துக்கு அழைப்பு விடுக்கின்றனர் என்றும் அது ஓர் எலும்புக்கூடு எனவும் அதில் எதுவும் இல்லை என்றும் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கம் தெரிவித்தது.

"13ஆவது திருத்தத்தை நீக்குமாறு பிக்குகளும் பல சிங்கள அரசியல்வாதிகளும் குரல் கொடுப்பதையும் இது காட்டுகிறது. 13ஆவது திருத்தம் அல்லது சமஷ்டி கோரி நாம் நேரத்தை வீணடிக்கக் கூடாது. இவை இரண்டும் ஒற்றையாட்சியின் ஒரு பகுதியும் மற்றும் 2/3 பெரும்பான்மை சிங்களவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளன" என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2

## 197 குடும்பங்களுக்கு காணி உறுதிப்பத்திரம்




வடக்கில் மீள்குடியேற்றப்படும் 197 குடும்பங்களுக்கான காணி உறுதிப்பத்திரங்கள் மற்றும் மீள்குடியேற்றக் கொடுப்பனவாக தலா 38,000 ரூபாய் வீதம் வழங்கப்படும் காசோலைகள் என்பவற்றைக் கையளிக்கும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளர் அலுவலகத்தில் சனிக்கிழமை (11) முற்பகல் நடைபெற்றது. தொடர்ச்சி P2

## கல்முனை வகுப்புகளுக்கு காதலர் தினத்தன்று பூட்டு

எம்.எம்.அஸ்லம்



கல்முனை மாநகர சபை எல்லைக்குள் இயங்கி வருகின்ற அனைத்து தனியார் கல்வி நிலையங்களையும் நாளையதினம் (14) மூடுமாறும் வகுப்புகள் நடத்துவதை தவிர்க்குமாறும் மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் பணிப்புரை விடுத்துள்ளார். தொடர்ச்சி P2





ரூ. 7 கோடி பெறுமதியான


## வலம்புரி சங்குகளுடன் நால்வர் சிக்கினர்

கனகராசா சரவணன், சுகத் எச்.எம்.ஹேவா

ஹட்டன் மல்லியப்பு பகுதியில் 6 கோடி ரூபாய்க்கு வலம்புரி சங்கை விற்பனை செய்ய முயன்ற இருவரும் 1 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியான இரு வலம்புரிச் சங்குகளை எடுத்துச் சென்ற இருவர் மட்டக்களப்பிலும் கைது செய்யப்பட்டுள்ளனர். தொடர்ச்சி P2

இறக்குமதி செய்யப்படும்

## உருளைக்கிழங்குக்கு விசேட வரி



இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்குக்கு வரி விதிக்க விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளதாகவும் இன்று (13) நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பான விடயங்களை ஜனாதிபதியிடம் முன்வைக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். தொடர்ச்சி P2

## உள்ளூராட்சி தேர்தலை நடத்த ஆணைக்குழு செயற்படுகிறது

### ஒத்துழைக்க தவறினால் நீதிமன்றை நாடுவோம்



மார்ச் 9 ஆம் திகதி திட்டமிட்டபடி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்காக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு செயற்பட்டு வருவதாகவும் ஆனால் எந்தவொரு பின்வரு நிலைக்கும் தயாராக இருப்பதாகவும் ஆணைக்குழுவின் தவிவாளர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார். தொடர்ச்சி P2



## நாட்டை அழித்தது ராஜபக்ஷர்களே

### மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்கிறார் சஜித்

நாட்டை அழித்து நாட்டை வங்குரோத்து ஆக்கியது ராஜபக்ஷர்களே என்பதை மக்கள் இன்றும் ஏற்றுக்கொண்டுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வங்குரோத்தாக்கியவர்களைப் பாதுகாக்க தனக்கு நெருக்கமான ஒருவரை ஜனாதிபதியாக நியமித்ததும் ஒரு நிதி சார்ந்த குற்றமாகும் என்றும் தெரிவித்தார். தொடர்ச்சி P2

## ஒரு கிலோ நெல்லுக்கு ரூ.100 உத்தரவாத விலை

### ஜனாதிபதி அறிவுறுத்தல்

ஒரு கிலோ நெல்லை அரசாங்கத்தின் ஊடாக நூறு ரூபாய் வீதம் உத்தரவாத விலையில் கொள்வனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள், அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். தொடர்ச்சி P2

தேர்தல் ஏற்பாடுகளை முன்னெடுக்க

## ரூ. 10 கோடி வழங்கியது திறைசேரி

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுப்பதற்காக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு திறைசேரி 10 கோடி ரூபாயை வழங்கியுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார். தொடர்ச்சி P2




வைத்தியசாலைகளில் அவசரமற்ற

## சத்திர சிகிச்சைகளை தாமதப்படுத்த தீர்மானம்



நாட்டில் நிலவும் மருந்து தட்டுப்பாடு மற்றும் சத்திர சிகிச்சைகளுக்கு தேவையான உபகரணங்களின் தட்டுப்பாடு என்பவற்றை கருத்திற்கொண்டு அவசரமற்ற சத்திர சிகிச்சைகளை தாமதப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், அரச வைத்தியசாலைகளில் அத்தியாவசிய மற்றும் அவசர சத்திர சிகிச்சைகளை துரிதமாக மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. தொடர்ச்சி P2

## யாழ். கலாசார நிலையம் மக்களுக்கு கையளிப்பு

இந்திய அரசாங்கத்தின் நன்கொடையின்கீழ் நிர்மாணிக்கப்பட்ட யாழ்ப்பாண கலாசார நிலையம், இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்திய அரசின் மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை, தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர். எல்.முருகன் உள்ளிட்ட முக்கியஸ்தர்களின் பிரசன்னத்துடன், சனிக்கிழமை (11) மக்களுக்கு கையளிக்கப்பட்டது. தொடர்ச்சி P2





PAGE 1 தொடர்ச்சிகள்

## தோணி மூழ்கியதில் ஆசிரியர் உட்பட 3 மாணவர்கள் பலி

தாந்தாமலைப் பகுதியில் அமைந்துள் நாற்பதுவட்டடைக் குளம் அமைந்துள்ள பகுதிக்கு ஞாயிற்றுக்கிழமை(12) சுற்றுலா சென்றுள்ளனர்.

ஆசிரியர்களும், மாணவர்களும் ஒன்றிணைந்து மதிய உணவை சமைத்து உண்டுள்ளனர். பின்னர் 3 ஆண் மாணவர்கள் அங்கிருந்த குளத்தில் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தோணியை எடுத்துக் கொண்டு குளத்திற்குள் சென்றுள்ளனர்.

தோணி குளத்தின் நடுவிற்குச் சென்றபோது தோணியிலிருந்த துவாரத்தின் வழியே நீர் தோணியை நிரப்பியுள்ளது. அதில் பயணித்த மாணவர்கள் கூக்குரலிட்டு சத்தமிட்டுள்ளனர். இந்நிலையில் ஆசிரியரான கிவேதன் குளத்தில் நீந்திச் சென்று மாணவர்களை காப்பாற்ற முயன்றுள்ளார். இச்சந்தர்ப்பத்திலேயே இவ்வனர்த்தம் இடம்பெற்று 4 பேரும் மிகவும் பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளனர்.

இதனால் அக்கிராமம் மாத்திரமின்றி அப்பகுதியே சோகத்தில் மூழ்கியுள்ளது. இதில் அறிவிப்பாளரும், பி.பி. கொம்.பட்டதாரியும், தனியார் கல்வி நிலையத்தின் ஆசிரியருமான 27 வயதுடைய யோ.கிவேதன்(கிரிதன்) மற்றும் களுமுந்தன்வெளி கஜமுன் வித்தியாலயத்தில் கல்வி கல்வி பொதுதர சாதாரண தரத்தில் கல்வி பயிலும் 16 வயதுடைய மாணவர்களான தயாபரன் சஜித்தன், சத்தியசீலன் தனு, வீரசிங்கம் விதுசன் ஆகியோரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். வ.சக்தி

# 13 ஆவது திருத்தம் எலும்புக்கூடு

வவுனியா பிரதான தபாலகத்திற்கு அருகாமையில் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் ஈகைப்பேரொளி முருகதாஸுக்கான அஞ்சலி நிகழ்வின் பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே சங்கத்தின் செயலாளர் கோ. ராஜ்குமார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், “காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களின் தாய்மார்களாகிய நாம் தமிழர் மண்ணில் வாழும் ஒவ்வொரு தமிழர்களையும் தமிழர் இறையாண்மைக்காக வாக்கெடுப்பு நடத்த அழைப்பு விட வேண்டும். இந்த வாக்கெடுப்பை அமெரிக்காவோ அல்லது ஐ.நாவோ கண்காணிக்க வேண்டும்.

உலகில் பெரும்பாலான வாக்கெடுப்புகள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தால் கட்டாயப்படுத்தப்பட்டவை.

இறுதி வாக்கெடுப்புக்கு அழைப்பு விடுங்கள். தமிழ் இறையாண்மை கிடைத்தால் நமக்கு வேண்டிய அனைத்தும் கிடைக்கும். நம் வாழ்க்கை நம் கட்டுப்பாட்டில் வரும்.

அண்மையில் சிங்கள சுதந்திர தினத்திற்கு எதிரான போராட்டத்தை நாங்கள் வரவேற்கிறோம், ஆனால் “சம்பாறு” போன்ற கோஷங்கள் உறுதியான கோஷம் எதுவும் இல்லை.

தமிழர் இறையாண்மைக்காகவோ அல்லதுதமிழர்சுதந்திரத்துக்காகவோ ஒரு வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்பதற்காகத்தான் போராட்ட முழக்கம் இருக்க வேண்டும்.

தமிழர்களுக்கு சற்று நிம்மதி தரக்கூடிய வேறு விடயங்களுக்கு அழைப்பு விடுக்காதீர்கள், ஆனால் அது இலங்கை அரசாங்கத்தால் ஒருபோதும் நடக்காது.

அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் மட்டுமே தமிழர்களுக்கு உதவ முடியும். வடக்கு கிழக்கில் உள்ள தமிழர்கள் அனைவரும் பொது வாக்கெடுப்புக்கு அழைப்பு விடுத்தால், அது அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் போன்ற பலம் வாய்ந்த நாடுகளை நிர்ப்பந்தித்து தமிழர் இறையாண்மைக்கான வாக்கெடுப்பை எளிதாக்கும்” என்றார்.

## இலங்கையரின் சடலம் மீட்பு

குறித்த பெண்ணின் சடலம் அவரது மகளால் அடையாளம் காணப்பட்டுள்ளதாக துருக்கியில் உள்ள இலங்கைத் தூதுவர் ஹசந்தி திஸாநாயக்க குறிப்பிட்டார்.

கண்டி - கலகெதரவில் இருந்து 20 வருடங்களுக்கு முன்னர் துருக்கிக்கு சென்ற, 69 வயதுடைய இலங்கைப் பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

துருக்கி நிலநடுக்கத்தின் பின்னர் 15 இலங்கையர்களும் பாதிப்புகள் இன்றி பாதுகாப்பாக மீட்கப்பட்ட போதும் அங்கு வசித்துவந்த பெண்ணொருவர், நிலநடுக்கத்தின் பின்னர் காணாமல்போயிருந்தார்.

அவரை தேடி தொடர்ந்து தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட நிலையில், இடிபாடுகளுக்கு மத்தியில் இருந்து அவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, துருக்கி மற்றும் வடமேற்கு சிரியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 50 ஆயிரத்தை அண்மித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

## உருளைக்கிழங்குக்கு விசேட வரி

நாட்டில் உருளைக்கிழங்கு பயிரிடும் விவசாயிகளையும் உள்ளூர் உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கையையும் பாதுகாக்கும் நோக்கில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கை தடை செய்வதற்கு பதிலாக அதற்கு வரி விதிக்குமாறு கோரி நிதி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப்புமாறு அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ், இலங்கையில் விதை உருளைக்கிழங்கு உற்பத்தி வருடாந்தம் ஒன்பது மில்லியனாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தற்போது பொரலந்த பிரதேசத்தில் சுமார் நூறு ஏக்கர் விதை உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இதற்காக அப்பகுதியில் அதிகளவான காணிகளைக் கண்டறிந்து விதை உருளைக்கிழங்கு செய்கையை விரிவுபடுத்த விவசாயிகளை ஊக்குவிக்குமாறும் அமைச்சர் ஆலோசனை வழங்கினார்.

## 2 நாட்கள் நடுங்கிய நிலம் நேற்று நடுங்கவில்லை

உனவடுன, ஊவா-பல்வத்த, யுத்கனாவ, வகுருவெல ஆகிய பகுதிகளில் சனிக்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக மக்களிடமிருந்து தகவல் கிடைத்ததாக புத்தல பிரதேச செயலாளர் ஆர்.எம்.எஸ். திலகரத்ன தெரிவித்தார்.

குடியிருப்பாளர்கள் உறங்கிக் கொண்டிருந்த போது மேற்கூரையும் கூரையும் அதிர்ந்ததாக பிரதேசவாசிகள் குறிப்பிட்டுள்ளனர். பெப்ரவரி 10ஆம் மதியம் மூன்று நிலநடுக்கங்கள் ஏற்பட்டதுடன், பல வீடுகள் (தற்காலிக வீடுகள்) விரிசல் அடைந்தன.

உனவடுன புத்தலோக பிரிவேனா சைத்தியத்தின் சூடாமாணிக்கம் தரையில் வீழ்ந்ததாக உடவெல சுமணரதனஹிமி தெரிவித்தார்.

சுரங்க மற்றும் அகழ்வு பணியகத்தின் அதிகாரிகள் குழுவொன்று வந்து விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக மொனராகலை அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ஏ.எச்.ரவீந்திர குமார தெரிவித்தார்.

ஞாயிறுக்கிழமை (12) நிலநடுக்கம் ஏற்பட்டதாக சிலர் கூறினாலும், அவ்வாறு எவ்விதமான நடுக்கமும் ஏற்படவில்லை என்றும், பொய்ப் பிரசாரங்களுக்கு மக்கள் ஏமாற வேண்டாம் என்றும் உதவிப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டார்.

## 197 குடும்பங்களுக்கு காணி உறுதிப்பத்திரம்

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய, யுத்தத்தின் போது பாதுகாப்பு படையினரால் பயன்படுத்தப்பட்ட வடக்கில் உள்ள காணிகளை அதன் உரிமையாளர்களான பொது மக்களிடம் மீள ஒப்படைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் இந்த காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் காணி உறுதிப் பத்திரங்கள் மற்றும் காசோலைகளை கையளிக்கும் அடையாள நிகழ்வு ஜனாதிபதி தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கடந்த 33 ஆண்டுகளாக இடம்பெயர்ந்து வாழ்ந்து வந்த மக்கள் தமது காணிகள் மீளக்

## சத்திர சிகிச்சைகளை தாமதப்படுத்த தீர்மானம்

வைத்திய பரிந்துரைகளுக்கு அமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல அறிவித்துள்ளார்.

நாட்டின் அரச வைத்தியசாலைகளில் சுமார் 140 மருந்து வகைகளுக்கு தற்போது தட்டுப்பாடு நிலவுவதாகவும் இவற்றில் 40 வகையான மருந்துகள் இந்த வாரத்துக்குள் கிடைக்கவுள்ளதாக அமைச்சர் கூறினார்.

## கல்முனை வகுப்புகளுக்கு காதலர் தினத்தன்று பூட்டு

அன்றைய நாள் காதலர் தினமாக அடையாளப்படுத்தப்படுவதால், மாணவிகள் மீது பகிடிவதைகள் மற்றும் வேண்டத்தகாத ஒழுங்கீன சம்பவங்கள் இடம்பெறுவதை சுட்டிக்காட்டி பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகள் விடுக்கும் வேண்டுகோள்களை கவனத்தில் கொண்டே இவ்வறிவுறுத்தல் விடுக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஆகையினால் நாளை எந்தவொரு டியூட்டரியையும் (பிரத்தியேக வகுப்பு) திறக்காமல் ஒத்துழைப்பு வழங்குமாறு அன்பாய் வேண்டுகின்றோம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இதனை கண்காணித்து, உறுதி செய்யுமாறு மாநகர சபையின் வருமானப் பரிசோதகர்கள் உட்பட சம்மந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், அன்றைய தினம் தங்களது பிள்ளைகளை வகுப்புகளுக்கு அனுப்புவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு பெற்றோர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இவ்வறிவுறுத்தலை மீறும் தனியார் கல்வி நிலையங்களின் அனுமதிப் பத்திரம் இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## உள்ளூராட்சி தேர்தலை நடத்த ஆணைக்குழு செயற்படுகிறது

உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்கான ஆணைக்குழுவின் முயற்சிகளுக்கு திறைசேரி மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் ஒத்துழைக்கத் தவறினால், தேர்தல்கள் ஆணைக்குழு உயர்நீதிமன்றத்தை நாடும் என்றும் குறிப்பிட்டார்.

தேர்தல் நோக்கங்களுக்காக திறைசேரியில் இருந்து மெதுவாக நிதி வழங்கப்படுவதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர், சில நிதிகள் வழங்கப்பட்டுள்ள போதும் தேர்தலுக்கு தாம் கோரிய அனைத்து நிதிகளும் இதுவரை விடுவிக்கப்படவில்லை என்றார்.

பெப்ரவரி இறுதி வரையான செலவுகளுக்கு 80 கோடி ரூபாய் தேவை என்றும் தவணை முறையில் நிதியை விடுவிக்க முடியும் என்றும் ஆணைக்குழு திறைசேரிக்கு அறிவித்திருந்தது என குறிப்பிட்டார்.

ஆணைக்குழு, வேட்பாளர்கள் மற்றும் தேர்தல் அதிகாரிகளுக்கான எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிக்குமாறு மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சிடம் விடுக்கப்பட்ட கோரிக்கை இதுவரை நிறைவேற்றப்பட வில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

## வலம்புரி சங்குகளுடன் நால்வர் சிக்கினர்

இராணுவ புலனாய்வு பிரிவுக்கு தகவல் கிடைத்த தகவலின் அடிப்படையில், விசேட அதிரடிப்படையினரால் சனிக்கிழமை (11) மல்லியப்பு பகுதியில் வைத்து இருவரும் கைதுசெய்யப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட வலம்புரி சங்கு மற்றும் கைதான ஹட்டன் மற்றும் நுவரெலியா பகுதியைச் சேர்ந்த இரு சந்தேகநபர்களும் மேலதிக விசாரணைகளுக்காக ஹட்டன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

விசாரணைகளின் பின்னர், இருவரையும் ஹட்டன் பதில் மாவட்ட நீதிபதி பார்த்திபன் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது, எதிர்வரும் 14ஆம் திகதிவரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

மட்டக்களப்பில் கைது

மட்டக்களப்பு வைத்தியசாலை வீதியில் ஒரு கோடி ரூபாய்க்கும் மேல் பெறுமதியான இரு வலும்புரி சங்குகளை வியாபாரத்துக்காக எடுத்துச் சென்ற இருவரை விசேட அதிரடிப்படையின் சனிக்கிழமை (11) மாலை கைது செய்து தம்மிடம் ஒப்படைத்துள்ளதாக மட்டக்களப்பு தலைமைய பொலிஸார் தெரிவித்தனர்.

கல்முனை விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய சம்பவதினமான சனிக்கிழமை மாலை 6 மணியளவில் மட்டக்களப்பு வைத்தியசாலை வீதியில் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதன் போது இருவர் வியாபாரத்துக்காக சுமார் ஒரு கோடி ரூபாய் பெறுமதியான இரு வலம்புரிசங்குகளை எடுத்துக் கொண்டு வந்துபோது அவர்களை விசேட அதிரடிப்படையின்

## நாட்டை அழித்தது ராஜபக்ஷர்களே

தற்போதைய ராஜபக்ஷ ஆதரவு அரசாங்கம் அந்த நிதிக் குற்றத்துக்கு காரணமானவர்களைத் தண்டிக்காவிட்டாலும், அந்த நிதிக் குற்றங்களைச்செய்தவர்கள் மற்றும் அதற்கு உறுதுணையாக இருந்த அனைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியின் கீழ் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட்டு, திருடப்பட்ட பணம் அனைத்தும் நாட்டுக்கு கொண்டு வரப்படும் என்றார்.

சிலாபத்தில் சனிக்கிழமை (11) இடம்பெற்ற பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கோடிக்கணக்கான தேவையற்ற செலவுகளைச் செய்து சுதந்திரத்தை கொண்டாடி இருக்க வேண்டிய தேவையில்லை எனவும், செலவு செய்யப்பட வேண்டிய பல அத்தியவசிய தேவைப்பாடுகள் உள்ளன என்றும் தெரவித்தார்.

சுதந்திர தினத்தன்று நடமாடும் கழிவறைக்கு 142 இலட்சம் ஒதுக்குவதற்குப் பதிலாக அந்த பணத்தைஏழை மக்களுக்கு சலுகை வழங்க, மீனவர்களுக்கும் விவசாயிகளுக்கும் எரிபொருள் மற்றும் உர மானியம்வழங்குவதற்கு ஜனாதிபதியும் அமைச்சர்களும் நினைக்கவில்லையா?, மனசாட்சி முன்வரவில்லையா? என்று கேள்வியெழுப்பினார்.

வெற்று சுதந்திரத்தை கொண்டாடி ஏராளமான பணத்தை நாசமாக்கியதாவும் சுட்டிக்காட்டினார்.

கடந்த காலங்களில் மக்கள் போராட்டத்தினால் நிதியமைச்சர், பிரதமர், ஜனாதிபதி ஆகியோர் நாட்டை விட்டே துரத்தியடிக்கப்பட்ட போதிலும் மொட்டுவின் 134 பேர் தந்திரமாக ராஜபக்ஷ வுக்கு விசுவாசமான ஒருவரை மெய்ப் பாதுகாவலராக ஜனாதிபதியாக நியமித்துள்ளனர் என்றார்.

## ஒரு கிலோ நெல்லுக்கு ரூ.100 உத்தரவாத விலை

யாழ்ப்பாணம் பரந்தன் வயல்வெளியில் நடைபெற்ற வடக்கு நெல் அறுவடை செய்யும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த ஜனாதிபதி, இலங்கைக்கு உணவு வழங்கக்கூடிய மாகாணமாக வட மாகாணமும் யாழ்ப்பாண மாவட்டமும் அபிவிருத்தி செய்யப்படும் என்றார்.

பரந்தன் வயல்வெளிக்கு விஜயம் செய்த ஜனாதிபதி, அங்குள்ள விவசாயிகளிடம் நெற்செய்கை தொடர்பான பிரச்சினைகளை கேட்டறிந்து கொண்டதுடன்,

மார்ச், ஏப்ரல் மாதங்களில் இருபது இலட்சம் குடும்பங்களுக்கு 10 கிலோ கிராம் அரிசியை இலவசமாக வழங்கும் திட்டத்தை செயல்படுத்த இருக்கிறோம் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## ரூ. 10 கோடி வழங்கியது திறைசேரி

திட்டமிட்டபடி மார்ச் 9ஆம் திகதி தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக குறிப்பிட்டார்.

நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் உள்ள போதிலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான ஆயத்தங்களை மேற்கொள்வதில் தங்களுக்கு சட்டத் தடைகள் எதுவும் இல்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

வாக்குச் சீட்டு விநியோகிக்கும் பணி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக குறிப்பிட்ட அவர், மார்ச் 9ஆம் திகதி தேர்தலை நடத்துவதை உறுதிசெய்ய ஆணைக்குழுவும் தேர்தல்கள் செயலக அதிகாரிகளும் பணியாற்றி வருவதாகக் குறிப்பிட்டார்.

தகுதியுடைய அனைத்து விண்ணப்பதாரர்களும் தத்தமது பணியிடங்களில் தங்களின் தபால் வாக்குகளை பெப்ரவரி 22, 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் பதிவு செய்யமுடியும் என்றும் குறிப்பிட்டார்.

## யாழ். கலாசார நிலையம் மக்களுக்கு கையளிப்பு

இந்திய உயர் ஸ்தானிகராலயம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது,

இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே, மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு துறைகளையும் சேர்ந்த முக்கியஸ்தர்களின் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம் கலாசார நிலையத்தினை பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பரிசென இங்கு வர்ணித்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்நிலையத்தை நிர்மாணித்து வழங்கியமைக்காக அவருக்கும் இந்திய அரசாங்கத்திற்கும் நன்றியினையும் தெரிவித்திருந்தார்.

அத்துடன் பொருளாதார சவால்களை எதிர்கொண்ட காலத்தில் வழங்கிய உதவிகளுக்காகவும் அவர் இந்தியாவுக்கு நன்றியினைத் தெரிவித்திருந்தார். மேலும், இரு நாடுகளுக்கும் இடையிலான கலாசார ஒற்றுமையினைச் சுட்டிக்காட்டியதுடன் இந்தியாவும் இலங்கையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை, இந்நிகழ்வில் உரை நிகழ்த்திய இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன், இலங்கையுடனான இந்திய ஒத்துழைப்பானது பிரதமர் நரேந்திர மோடியின் அயலுறவுக்கு முதலிடம் கொள்கை மூலம் வழிநடத்தப்படுவதாக சுட்டிக்காட்டினார்.

வடமாகாணத்தில் பல்வேறு விடயங்களையும் உள்ளடக்கிய வகையில் மக்களை இலக்காகக் கொண்ட அபிவிருத்தி திட்டங்கள் இந்திய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்றார்.



# தரம் பிரியுங்கள்



ந.ரிலக்ஷனா
ஊடகக்கற்கைகள் துறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

நாமும் நம்மை சூழமுள்ள இடங்களும் சுத்தமாக இருக்க வேண்டியது நம் ஒவ்வொருவருடைய கடமையாகும். ஒவ்வொருவரும் பொறுப்புடன் செயல்படும் பட்சத்தில் நமது சூழலை சுத்தமாக பேணி பாதுகாக்க முடியும். இன்றைய நிலையில் எங்கு பார்த்தாலும் குப்பைகள் வீடியோ உரங்களிலும் சரி நடக்கும் பாதைகளில் சரி தண்ணீர் போகும் வடிகால்கள் என எல்லா இடங்களிலும் குப்பைகளை கண்டபடி வீசி விடுகின்றார்கள் நம் மக்கள் இதனால் நம் சூழல் பெரும் பாதிப்புக்கு உள்ளாகின்றது குப்பைகள் நிரம்பி குப்பை மேடுகளாக மாறுகின்ற தன்மையே எல்லா இடங்களிலும் காணப்படுகின்றது.

அதற்கு அமைவாக குடியிருப்பு பகுதிகளில் ஆங்காங்கே குப்பை கழிவுகள் வீசி எறியப்பட்டுள்ளதுடன் துர்நாற்றமும் வீசுகின்றது. இந்த குப்பை கழிவுகளை நாய்கள் இழுத்து பாதை முழுவதும் பரப்பி விடுவதால் மக்கள் வீதிகளில் நடப்பதற்கு பெரும் அசௌகரியத்தை எதிர்நோக்கியுள்ளனர். அத்துடன் இந்த குப்பைகளை கட்டாக்காலி நாய்கள் உண்ணும் சந்தர்ப்பங்களில் அவ்வழியாக நடப்பவர்களை கடிக்க முற்படுவதால் சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பெரியவர்கள் பயத்துடன் பாதையில் நடக்க வேண்டியிருக்கிறது.

குப்பைகளை குப்பை வண்டியில் கொடுக்கும் போதே குப்பைகளில் தரம் பிரிப்பதில் ஏற்படும் சிக்கல்கள் தெரிய வருகின்றன. இதன் போது நகர சபை ஊழியர்கள் இந்த குப்பைகளை பொறுப்பேற்க மறுப்பதால் மக்கள் மற்றம் நகர சபை ஊழியர்களிடம் முறுகள் நிலையும் ஏற்படுகிறது. இதுவும் நகர சபையின் கழிவு முகாமைத்துவ செயற்பாடுக்கு பெரும் பின்னடைவாக காணப்படுகின்றது. மேலும் சில தின்ம கழிவுகளை நகர சபையின் குப்பை சேகரிக்கும் வண்டியில் பொறுப்பேற்காது விடுகின்றனர். கேட்டால் இவற்றை தமக்கு பொறுப்பேற்க வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் இந்த தின்ம கழிவுகளை குடியிருப்பாளர்களே அகற்றி கொள்ள வேண்டும் என நகர சபையினால் கூறப்படுகின்றது. அப்படியானால் குடியிருப்பாளர்கள் எவ்வாறு இந்த தின்மக் கழிவுகளை அகற்றுவது என்ற பெரும் கேள்வி எழுகிறது. நகர சபையினருக்கே இந்த கழிவுகளை அகற்ற முடியாது மக்கள் இந்த குப்பை கழிவுகளை எவ்வாறு அகற்றுவார்கள்?

தமது எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் குப்பை கழிவுகளை முறைப்படி அகற்றி பிரதேசத்தின் சுத்தம் மற்றும் சுகாதாரத்தை பேணுவதே இந்த நகரசபையின் பிரதான கடமை. அதை விடுத்து குறித்த குப்பை கழிவுகளை மற்றுமே நாம் அகற்றுவோம் மற்ற குப்பை கழிவுகளே மக்களே அகற்றி கொள்ள வேண்டும் என கூறுவது எந்த வகையில் நியாயமானது? இந்த அறிவித்தலுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தாம் சிலர் தெரிவிக்கின்றனர்.

குடியிருப்பாளர்கள் பலர் தமது குப்பைகளை குப்பை சேகரிக்கும் வண்டியில் கொடுக்க முடியாது போகும் குப்பைகளையும் நகர சபையினர் பொறுப்பேற்காத குப்பைகளையும் வீதி ஓரங்களிலும் வடிகான்களிலும் இட்டு எரிக்கின்றனர். இதனால் சில நேரங்களில் நகர குடியிருப்ப பகுதிகள் புகை மூட்டம் நிரம்பி காணப்படுகின்றது. அத்துடன் எரிந்தது போக மீதமுள்ள குப்பைகள் இந்த வடிகான்களில் பெரும்மளவில் தேங்கி காணப்படுகின்றது. இதனால் வடிக்கால்களால் தண்ணிகள் போகாமல் அவை சேமிக்கப்பட்டு மிகவும் அபரிதமான டெங்கு பரவுவதற்கான நிலை ஏற்படுத்துகின்றது.

இத்தகைய நிலைமையே நமது நாட்டிலும் சரி நமது சமுதாயத்திலும் சரி இடம் பெற்றுக் கொண்டு வருகின்றது அதனை அனைவரும் அறிந்தது ஒன்று.

இந்த விடயத்தினை நாம் எவ்வாறு சரிப்படுத்தலாம் என்று பார்க்கும் பொழுது குப்பைகளை நாம் உரிய முறையில் அவற்றை அகற்றி வரும் பொழுது அவை சிறந்த முறையில் நமது சுற்றாடலை பாதுகாக்கும். அதாவது குப்பைகளை உரிய கழிவு முகாமைத்துவத்தின் மேற்கொண்டு அவற்றை அகற்றுவதன் மூலம் எவ்வித சூழலுக்கு பாதிப்பு ஏற்படாது தன்மை காணப்படும்..

மனிதனுடைய அன்றாட பயன்பாடுகள், கைத்தொழில் நடவடிக்கைகள் மற்றும் ஏனைய செயற்பாடுகளின் போது எஞ்சுகின்ற கழிவுகளையே நாம் குப்பை என்கின்றோம். பொதுவாக குப்பை என்பது எவ்விதமான பயன்பாடும் அற்ற தேவையற்ற பொருட்களின் கூட்டு என எம்மில் பலர் நினைக்கின்றோம். அது முற்று முழுதும் தவறான விடயமாகும். ஏனெனில் குப்பைகளை கொண்டு சில பயன்களையும் கூட பெற்றுக்கொள்ள முடியும் என்பதே உண்மையாகும். இக்கட்டுரையில் குப்பை பற்றி நோக்கலாம். குப்பைகளை அவற்றின் தன்மைக்கேற்ப பிரதானமாக மக்கும் குப்பை, மக்காத குப்பை என இரு வகைப்படுத்தலாம். இவற்றை உலோகக் குப்பைகள், உலோகமற்ற குப்பைகள் எனவும் வகைப்படுத்தலாம்.

மேலும் குப்பைகள் வெளியிடப்படும் துறைகள் சார்பில் அவற்றை வீட்டுக்கழிவுகள், இலத்திரனியல் குப்பைகள், மருத்துவ குப்பைகள், இரசாயன குப்பைகள், கதிரியக்க கழிவுகள், பண்ணைக் கழிவுகள் எனவும் பல வகைப்பாட்டிற்கு உட்படுத்தலாம்.

இவ்வகையான குப்பைகளின் விளைவுகள் நன்மையையும் தீமையையும் எமக்கு தருவது நமது செயற்பாட்டை பொறுத்தவாறே ஆகும். குப்பைகளில் மக்கும் குப்பைகளானவை பிரிகையாக்க செயற்பாட்டிற்கு உட்படுத்தப்படுவதன் ஊடாக எமக்கு பல நன்மைகளை தருகின்றன. இக்குப்பைகளை உக்கலடைய செய்வதன் மூலமாக விவசாயத்திற்கு தேவையான சேதன உரத்தினை உற்பத்தி செய்ய முடியும். சேதன விவசாய உற்பத்திகள் மனித உடலுக்கு தீங்கற்றவையாகும். மேலும் சேதன உர உற்பத்தியானது பல வேலைவாய்ப்புக்களை உருவாக்க கூடிய பொருளாதார நடவடிக்கையாகவும் காணப்படுகின்றது. இதன் மூலம் குப்பைகளை குறைத்துக் கொள்ளவும் குப்பைகளை கொண்டு சூழல் நேய விவசாய முறையினையும் மேற்கொள்ள முடியும்.

பெரும்பாலும் உண்டாக்கப்படும் தீமைகளுக்கு மக்காத குப்பைகளே காரணமாக உள்ளன. ஏனெனில் இரசாயன பொருட்களின் சேர்வைகளினால் உருவாகிய பிளாஸ்டிக்கானது மக்குவதற்கு நூற்றுக் கணக்கான ஆண்டுகளும் கண்ணாடி போன்ற பொருட்கள் மக்குவதற்கு அதற்கும் மேலான காலமும் தேவைப்படும். இவை சூழலின் சமநிலையை குழப்புவதாக அமைவதோடு இயற்கை வட்ட செயன்முறைகளையும் பாதிப்படைய செய்கின்றன. நிலம், நீர், வளி என அனைத்தையும் மாசாக்கத்திற்கு உட்படுத்துகின்றன. மனிதனுக்கு உடலியல் ரீதியில் பல நோய்கள் ஏற்படவும் காராணமாகின்றன.

குப்பைகளை அகற்றும் செயன்முறையினை அனைத்து நாடுகளும் பல நிறுவன கட்டமைப்பின் கீழ் செய்து வருகின்றன. இன்னும் பல அரச சார்பற்ற நிறுவனங்களும் கூட இதற்காக தொண்டுபணி ஆற்றி வருகின்றன. வீடுகள் மற்றும் தொழிற்சாலைகளில் வெளிவிடப்படும் குப்பைகளை சேகரித்தல், அவற்றை வகைப்படுத்தல், பொருத்தமான இடங்களில் அவற்றை சேமித்தல், கண்காணித்தல், மீள்சுழற்சிக்கு உட்படுத்தல் என்பன கழிவு மேலாண்மையில் உள்ளடங்கியுள்ளன. மேலும் கழிவுகளை தேக்கி வைக்கும் இடத்தினை தெரிவு செய்தல் கழிவு மேலாண்மையில் சவால் மிக்க ஒன்றாக காணப்படுகின்றது.

குப்பைகள் கழிவுப் பொருட்களாக காணப்பட்டாலும் அவற்றை நன்மை விளைவிப்பவையாகவும் தீமை விளைவிப்பவையாகவும் மாற்றுவது எமது கைகளிலேயே தங்கியுள்ளது. அதற்கு குடிமக்களாகிய எமக்கும் கழிவு மேலாண்மையில் பங்கு உள்ளது என்பதனை உணர்ந்து செயற்பட வேண்டும். குப்பைகளை முறையாக அகற்றி எமது இயற்கை சூழலை பாதுகாத்து மனித சமூகத்திற்கு நன்மைகளை பெற முயற்சிக்க வேண்டும்.






# இன்று உலக வானொலி தினம்



உமாகாந்தன் கஜேந்தினி
நான்காம் வருடம், ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்



உலக வானொலி தினம் என்பது பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும், வானொலியின் முக்கியத்துவத்தைக் குறிக்கவும் உருவாக்கப்பட்டது. உலக வானொலி தினத்தின் முக்கிய நோக்கம், வானொலியின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை பொதுமக்கள் மற்றும் ஊடகங்களிடையே ஏற்படுத்துவதாகும். இன்றும் கூட, குறிப்பாக தொலைதூர இடங்கள் மற்றும் விளிம்புநிலை மக்களுக்கு தகவல்தொடர்புக்கான சக்திவாய்ந்த ஊடகமாக காணப்படுகிறது. யுனெஸ்கோவின் உறுப்பு நாடுகளால் 2011 இல் அறிவிக்கப்பட்டது மற்றும் 2012 இல் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் சர்வதேச தினமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. பெப்ரவரி 13 உலக வானொலி தினமாக (WRD) ஆனது. World Radio Day என்பர்.

வானொலியானது மனிதகுலத்தை அதன் அனைத்து பன்முகத்தன்மையிலும் கொண்டாடுவதற்கான ஓர் ஊடகம் மற்றும் ஜனநாயக சொற்பொழிவுக்கான ஒரு தளமாக அமைகிறது. உலக அளவில், வானொலி மிகவும் பரவலாக நுகரப்படும் ஊடகமாக உள்ளது. பரந்த பார்வையாளர்களை சென்றடையும் இந்த தனித்துவமான திறன் என்பது, ஒரு சமூகத்தின் பன்முகத்தன்மையின் அனுபவத்தை வடிவமைக்கும், அனைத்து குரல்களும் பேசுவதற்கும், பிரதிநிதித் துவப்படுத்தப்படுவதற்கும், கேட்கப்படுவதற்கும் ஓர் அரங்கமாக செயற்படுகின்றது.

> வானொலி நிலையங்கள் பலதரப்பட்ட சமூகங்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்றும் பல்வேறு வகையான நிகழ்ச்சிகள், கண்ணோட்டங்களை வழங்கவேண்டும்

> வானொலி உலகில் மிகவும் நம்பகமான ஊடகங்களில் ஒன்றாகத் தொடர்கிறது. பொது மக்களுக்குப் புகாரளித்துத் தெரிவிப்பதில், வானொலி நிலையங்கள் பொதுக் கருத்தை வடிவமைக்கின்றன

வானொலி நிலையங்கள் பலதரப்பட்ட சமூகங்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்றும் பல்வேறு வகையான நிகழ்ச்சிகள், கண்ணோட்டங்கள் மற்றும் உள்ளடக்கத்தை வழங்க வேண்டும் என்றும் அவர்களின் நிறுவனங்கள் மற்றும் செயல்பாடுகளில் பார்வையாளர்களின் பன்முகத்தன்மையை பிரதிபலிக்க வேண்டும் என்றும் செயற்படுகிறது.

பல்வேறு சர்வதேச அறிக்கைகளின்படி, வானொலி உலகில் மிகவும் நம்பகமான மற்றும் பயன்படுத்தப்படும் ஊடகங்களில் ஒன்றாகத் தொடர்கிறது. பொது மக்களுக்குப் புகாரளித்துத் தெரிவிப்பதில், வானொலி நிலையங்கள் பொதுக் கருத்தை வடிவமைக்கின்றன. இது நம் அன்றாட வாழ்வில் இன்னும் முக்கியமானது.

மக்களையும் சமூகங்களையும் ஒன்றிணைக்கும் செயற்பாட்டை மேற்கொள்கிறது. வன்முறை மற்றும் அரசியல் வாதங்கள் போன்ற பிரச்சனைகளில் ஜனநாயக விவாதத்தை வழங்க வானொலி ஓர் அருமையான வழியாகும். இது பழைய மற்றும் புதிய கேட்போர் மத்தியில் தன்னை நிலைநிறுத்த பல வழிகளில் செயற்படுகிறது. அவசர காலங்களில் வானொலி வகிக்கும் பங்கை ஊக்குவிப்பதால் உலக வானொலி தினம் முக்கியமானது. இதற்கு சிறந்த உதாரணமாக யுத்த காலத்தின் போதும், கொரோனா காலத்தின் போதும் வானொலி நேயர்கள் வானொலியை அதிகம் நுகர்ந்தனர்.

வானொலியின் பயன்கள் வரிசையில் விடுமுறைக்காக அல்லது வேலைக்காக அந்த நீண்ட பயணங்களின் போது, வானொலி இன்னும் எங்களுடன் உள்ளது. எங்களைப் பாட வைத்து, புதிய பாடல்களாக இருந்தாலும் சரி உடனடி செய்திகளாக இருந்தாலும் சரி எங்களுக்குத் தெரிவிக்கிறது.

இது ஒரு சிறந்த நண்பர் மற்றும் அண்டை வீட்டாரைப் போன்று எம்முடன் தொடர்கிறது. வானொலி என்பது ஒரு பொழுதுபோக்கு ஊடகமாகும். இது மில்லியன் கணக்கான மக்களை ஒரே நேரத்தில் ஒரே விடயத்தை கேட்க அனுமதிக்கிறது. தொழில்நுட்பம் பரிணாம வளர்ச்சி அடைந்தாலும் வானொலி அதன் முக்கியத்துவத்தை இழக்கவில்லை.

வானொலி உலகின் பரந்த பார்வையாளர்களை சென்றடைகிறது. எத்தனை புதிய ஊடகங்களின் ஊடுருவல் காணப்பட்டாலும் வானொலி ஊடகம் எப்போதும் சிலரை தன்வசப்படுத்தி வைத்துள்ளது. கடந்த காலத்தில், வானொலி மட்டுமே செய்தி மற்றும் பொழுதுபோக்கிற்கான ஒரே ஒலிபரப்பு சாதனமாக இருந்தது.

வானொலியில் கூட கற்பனை நாடகங்கள் நடத்தப்பட்டன. வானொலி மற்ற எந்த வகையான ஒளிபரப்பு ஊடகங்களையும் விட நீண்ட காலமாக நம்முடன் உள்ளது. அதாவது ஏனைய தொழில்நுட்பங்களை விட அதிகமான மக்கள் இதை அணுகுகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் உலக வானொலி தினத்தன்று, தனிமைப்படுத்தப்பட்ட சமூகங்களை எவ்வாறு சென்றடைவது என்பதைக் கண்டுபிடிப்பதற்காக இந்தத் துறையில் உள்ள வல்லுநர்கள் ஒன்றிணைகின்றனர். சமூக ஊடகங்கள் மற்றும் உள்ளூர் வானொலியை இணைப்பது சமூகப் பங்கேற்பை வலுப்படுத்த ஒரு வாய்ப்பாகும், குறிப்பாக ஒதுக்கப்பட்ட குழுக்களின் பங்கேற்பை வலுப்படுத்துகிறது. உலக வானொலி தினம், ஒவ்வொருவரும், எவ்வளவு மையமாக இருந்தாலும் அல்லது தொலைவில் இருந்தாலும், தகவல் அணுகலை உறுதி செய்கிறது.

செய்திகள், தகவல் மற்றும் பொழுதுபோக்கைப் பெற பல வழிகள் உள்ளன. நீங்கள் அதை கேபிள் தொலைக்காட்சி அல்லது இணையத்திலிருந்து பெறுகிறீர்கள் என்றால், அதற்கு நீங்கள் பணம் செலுத்த வேண்டியிருக்கும். வானொலியில் அப்படி இல்லை. எங்கும் எதிலும் வானொலியை நுகர முடியும். உலக வானொலி தினமானது இன்றும் வானொலி வாழ்கிறது என்பதை உறுதி செய்கிறது.

பல ஆண்டுகளுக்கும் மேலாக இருந்தாலும், வானொலியானது தகவல்களைப் பரிமாறிக்கொள்வதற்கும், சமூகப் பரிமாற்றங்களை வழங்குவதற்கும், உலகெங்கிலும் உள்ள மக்களுக்கு கல்வி கற்பதற்கும் மிகவும் பிரபலமான ஊடகங்களில் ஒன்றாக திகழ்கிறது. முதியோர் தொடக்கம் சிறுவர்கள் வரை பல நிகழ்வுகளை வானொலி உள்ளடக்கியுள்ளது. மக்கள் தங்களைப் பாதிக்கும் தலைப்புகளில் விவாதங்களில் ஈடுபட வானொலி வாய்ப்பாயிருக்கிறது.

இது பல வழிகளில் பயன்படுகிறது. வானொலியின் பலம், அதன் தனித்துவமான சந்தைப்படுத்தல் சக்தி மற்றும் விளம்பரத் தொழில்நுட்பத்தில் ஆடியோ கண்டுபிடிப்புகள் மற்றும் விளம்பர நிலப்பரப்பில் தரவுகளால் உருவாக்கப்பட்ட ஊடக கலவை வாய்ப்புகள் ஆகியவற்றை இணைத்து வானொலி ஒலிபரப்பானது வலம் வருகிறது. தொலைதூர அல்லது உடனடி பதட்டமான சூழல்களில், தொடர்புடைய திட்டங்கள் மற்றும் சுயாதீனமான செய்தி அறிக்கைகள் நிலையான ஜனநாயகம் மற்றும் நல்லாட்சிக்கான அடித்தளத்தை வானொலிகள் வழங்குகின்றன.

உலக வானொலி தினத்தின் நோக்கம் வானொலியின் தனித்துவமான மதிப்பின் மீது பொதுமக்களின் கவனத்தை ஈர்ப்பதாகும். இது பரந்த பார்வையாளர்களை சென்றடைவதற்கான ஊடகமாக உள்ளது மற்றும் தற்போது புதிய தொழில்நுட்ப வடிவங்களையும் சாதனங்களையும் எடுத்து வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக, வானொலியை ஆன்லைனில், ஸ்ட்ரீமிங்கில், போட்காஸ்ட் மூலமாகவும், ஆப்ஸ், டேப்லெட்கள் மற்றும் மொபைல் போன்கள் மூலமாகவும் கேட்டு மகிழ்ந்து வருகிறோம். ஊடகம் அதன் கேட்பவர்களுடன் மாறிக்கொண்டே இருக்கிறது.

வானொலியானது சமூகங்களை ஒன்றிணைப்பதற்கும் மாற்றத்திற்கான நேர்மறையான சிந்தனையை வளர்ப்பதற்கும் தனித்துவமாக அமைந்துள்ளது. நேயர்களின் தேவைகளுக்கு ஏற்ப வானொலி பன்முகத்தன்மையை வழங்குகிறது.

இது விரைவாக பரவியது, கற்பனை செய்யக்கூடிய ஒவ்வொரு இடத்திலும், தகவலை அனுப்புவது முதல் இசையை ஒலிபரப்புவது வரை, மேலும் பல தகவல்களை அனுப்புவதற்கான ஒரு வழியாகவும் செயல்படுகிறது. வானொலி இன்று உலகில் மிகவும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியதாக ஆய்வுகளால் உணரப்பட்டதால் இன்றைய தினம் உலக வானொலி தினமாக கொண்டாடப்படுகிறது.

## பொது அறிவித்தல்


2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (2) ஆம் பிரிவின் பிரகாரம், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கீழ் காணும் மாற்றம் தொடர்பான அறிவித்தலை இத்தால் நாம் வழங்குகின்றோம்.

**கம்பனியின் பழைய பெயர் :** எஸ்.சீ.ஜொன்சன் என்ட் சன் (பீவீடீ) எல்டீடி
**கம்பனியின் புதிய பெயர் :** ப்ரைலொன் கன்சியூமர் புரொடக்ட்ஸ் லங்கா (பீவீடீ) எல்டீடி
**பதிவு அலுவலக முகவரி :** இல. 27ஏ, சேதவத்தை வீதி, வெல்லம்பிட்டிய.
**கம்பனியின் இலக்கம்:** பீ வீ 97909
**மாற்றம் நிகழ்ந்த திகதி :** 25.01.2023

**டைரக்டர்**
**க்ரஸ்டன் கோர்பரேட் சேர்விசஸ் (பிவிடி) எல்டீடி**
**கம்பனி செயலாளர்கள்.**

# வடக்கில் 100 பிள்ளைகளுக்கு இந்திய புலமைப்பரிசில்

■ எஸ் தில்லைநாதன்



“இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் வழிகாட்டலின் பேரில், வடமாகாணத்திலுள்ள பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த 100 பிள்ளைகளுக்கு இந்திய அரசின் சார்பில் புலமைப்பரிசில் வழங்கும் திட்டமொன்று அறிமுகம் செய்யப்படும்” என்று இந்திய மத்திய இணை அமைச்சர் கலாநிதி எல். முருகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற யாழ்.கலாசார நிலையத் திறப்பு விழாவில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்றைய நாள் எமது இரு நாடுகளுக்கும் மிகச் சிறப்பானதாகும். ஏனெனில் யாழ். கலாசார மையம் இன்று பொதுமக்களிடம் கையளிக்கப்படுகிறது. இந்த வரலாற்று நிகழ்வின் ஒரு பகுதியாக எனக்கும் இதில் கலந்து கொள்ள கிடைத்தமையை பெரும் பாக்கியமாக கருதுகிறேன். இது எங்கள் உறவில் முக்கிய மைல் கல்லாக நினைவில் கொள்ளப்படும் என்றார்.

2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்திய பிரதமர் நரேந்திர மோடி இந்த அற்புதமான வசதிகள் நிறைந்த கட்டடத் தொகுதிக்கு அடிக்கல் நாட்டினார் என்பதை நான் இந்நேரத்தில் மகிழ்ச்சியுடன் நினைவுகூறுகின்றேன்.

இத்திட்டத்தை நிறைவு செய்து பொது மக்களிடம் கையளிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்நிலையம் மக்களின் கலை மற்றும் கலாசாரத்தை மேம்படுத்த உதவும். திரையரங்கு பாணியில் அமைக்கப்பட்டுள்ள கலையரங்கம், மிதக்கும் மேடை, பதினொரு மாடிகள் உள்ளிட்ட பல வசதிகளைக் கொண்ட இம்மையம் இலங்கை மக்கள் மீது இந்தியா கொண்டுள்ள உறுதிப்பாட்டின் நீடித்த அடையாளமாக இருக்கும் என்றார்.

நான் இங்கே தங்கியிருந்த காலப்பகுதியில் வீட்டு வசதி, கல்வி, சுகாதாரம், விவசாயம் அதற்கும் அப்பாலென இந்தியாவின் நிலையான அர்ப்பணிப்பை அனைத்து மாகாணங்களிலும் தெட்டத் தெளிவாகக் கண்டேன்.

துரையப்பா மைதானத்தின் புனரமைப்பு மற்றும் புனிதமான திருக்கேதிஸ்வர ஆலயத்தின் மறுசீரமைப்பு ஆகிய இரண்டும் நான் நேரில் கண்ட உதாரணங்கள் ஆகும்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் ‘அயலவர்களுக்கு முன்னுரிமை’ என்ற கொள்கைக்கமையவே இந்த அர்ப்பணிப்புகள் முன்னெடுக்கப்படுகின்றன. இக்கொள்கையின் கீழ் இலங்கை ஒரு முக்கிய இடத்தைப் பெறுவது இயற்கையானது என்றார்.

## சட்டத்தரணி ரெமீடியஸ் காலமானார்

■ எஸ் தில்லைநாதன்



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாநகர சபை உறுப்பினரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான முடியப்பு ரெமீடியஸ் சனிக்கிழமை (11) காலமானார்.

பருத்தித்துறை வீதி, சிறுப்பிட்டியில் கடந்த 8ஆம் திகதி இடம்பெற்ற வீதி விபத்தில், பலத்த காயங்களுக்கு உள்ளான அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

மூளையில் ஏற்பட்ட கடுமையான சிதைவு மற்றும் இரத்தக் கசிவுகள் மூளையின் செயற்பாடுகளை கடுமையாக பாதித்ததன் விளைவாக சத்திர சிகிச்சை மற்றும் அதிதீவிர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டபோதும் அது பலனளிக்கவில்லை.

சிறுப்பிட்டி பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது, நாய் குறுக்கே ஓடியதால் அவர் விபத்துக்கு உள்ளாகியிருந்தார்.

அவர் விபத்துக்குள்ளான இடத்தில் மற்றொரு தலைக்கவசம் காணப்பட்டதாக கூறப்பட்டதை அடுத்து, சம்பவம் தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்கும்படி யாழ்.நீதிமன்ற பதில் நீதிவான் பா.தவபாலன் உத்தரவிட்டார்.

## 18 பேருக்கும் பிணை

சுதந்திர தின கொண்டாட்டத்துக்கு எதிராக யாழ். நகரில் போராட்டம் நடத்திய பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்ட 18 பேரையும் தலா மூன்று இலட்சம் பெறுமதியான இரண்டு சரீர பிணையில் விடுவித்து யாழ்ப்பாண பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சனிக்கிழமை (11) இரவு 11 மணியளவில் நீதவானின் வாசஸ்தலத்தில் 18 பேரையும் பொலிஸார் ஆஜர்படுத்தியபோதே பதில் நீதவான் இந்த உத்தரவையிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சுதந்திர தின கொண்டாட்டத்துக்க எதிராக யாழ். நகரில் போராட்டம் நடத்திய பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்ட 18 பேர் சனிக்கிழமை (11) மதியம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# 27 ஆவது ஆண்டு நினைவுதினம்

கிளிவெட்டி, குமாரபுரம் படுகொலையின் 27ஆவது ஆண்டு நினைவுதினம் சனிக்கிழமை (11.02.2023) குமாரபுரத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது உயிரிழந்தவர்களின் புகைப்படங்களுக்கு பொதுமக்கள் மலர்தூவி, விளக்கேற்றி அஞ்சலி செலுத்துவதையும், அகம் மனிதாபிமான வள நிலையத்தின் இணைப்பாளர் க.லவகுசராசா மற்றும் கற்பிணித்தாய் உட்பட தனது உறவினர்கள் ஏழுபேரை பலிகொடுத்த பிரியா உரையாற்றினார்கள். நினைவுத் தூபியில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வையும் கலந்துகொண்ட மக்களையும் படத்தில் காணலாம்.

கிளிவெட்டி - குமாரபுரம் கிராமத்தில் 11.02.1996ஆம் ஆண்டு இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தில் பெண்கள், சிறுவர்கள் உட்பட 26 அப்பாவி பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்ததுடன் 15 வயதான சிறுமி ஒருவர் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார்.

## வத்திராயனில் சாதனை மாணவர்கள் கௌரவிப்பு

■ எஸ் தில்லைநாதன்

யாழ்ப்பாணம், வடமராட்சி, கிழக்கு வத்திராயன் கிராம சேவகர்கள் பிரிவுக்கு உட்பட்ட தரம் ஐந்து புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த ஆறு மாணவர்களும் கல்விப் பொது தர சாதாரண தர பரீட்சையில் 9 பாடங்களிலும் அதி திறமைச்சித்தி பெற்ற ஒரு மாணவன் உட்பட 21 மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

வத்திராயன் கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் சி. சிவகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முதல் நிகழ்வாக விருந்தினர்கள், சாதனை மாணவர்கள், மற்றும் பிரதம, சிறப்பு கௌரவ விருந்தினர்கள், விழா மண்டபம் வரை அழைத்து வரப்பட்டு மங்கள விளக்கு ஏற்றப்பட்டது.

தொடர்நது கருத்துரைகளை பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மருதங்கேணி கோட்ட கல்வி பணிப்பாளர் சிறிஇராம சந்திரன், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட வடமராட்சி கிழக்கு பிரதேச சமூக சேவை உத்தியோகத்தர் ப. பரதன், கௌரவ விருந்தினராக கலந்து கொண்ட வத்திராயன் கிராம உத்தியோகத்தர் ச.ராதிகா ஆகியோர் வழங்கியதுடன் திறமையாளர்களுக்கு பரிசில்கள் மற்றும் கௌரவங்களையும் வழங்கி கௌரவித்தனர்.

இந்நிகழ்வில் வத்திராயன் கிராம மக்கள், மாணவர்கள் நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## அரசாங்கம் மக்களின் தலையில் கட்டிவிட்டு

# வேடிக்கை பார்க்கிறது



■ எப்.முபாரக்

ராஜபக்ஷர்கள் செய்த ஊழலால் ஏற்பட்ட பாதிப்புகளை மக்கள் தலையில் கட்டி இந்த அரசாங்கம் வேடிக்கை பார்த்து வருகின்றது என திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

கிண்ணியாவில் சனிக்கிழமை இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்ட உரையாற்றுகையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ராஜபக்ஷர்கள் ஆட்சி பீடமேறியது முதல், நாட்டில் தரகுபணம் பெறும் (கமிசன்) செயற்பாடுகள் அதிகரித்தன. ஊழல் உச்சக்கட்டத்தில் இருந்தது. பொருத்தமற்ற பொருளாதார நடைமுறைகளை அவர்கள் பின்பற்றினர். இதனால் நாட்டின் பொருளாதாரம் சீரழிந்தது. பொருட்களின் விலை 300 முதல் 500 வீதம் வரை அதிகரித்தன; இன்றும் அதிகரித்து வருகின்றன. எனினும் வருமானத்தில் எந்த அதிகரிப்பும் ஏற்படுத்தப்படவில்லை. இதனால் பொதுமக்கள் சொல்ல முடியாத அளவு துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

நாட்டின் இந்த நிலைக்கு காரணமானவர்கள் மிகவும் சந்தோசமாக, தைரியமாக நடமாடி வருகின்றார்கள். அவர்களுக்கெதிராக எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. ஆனால் அவர்களால் உருவாக்கப்பட்ட சகல நட்டங்களையும் இழப்புகளையும் பொதுமக்கள் தலையில் கட்டி இந்த அரசாங்கம் வேடிக்கை பார்த்து வருகின்றது.

ராஜபக்ஷர்கள் காலத்தில் இடம்பெற்ற பல மோசடிகளும் அதனால் ஏற்பட்ட பாரிய நிதி இழப்புகளும் வெளிச்சத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. நாட்டிலுள்ள சகலரும் இவற்றை விளங்கியிருக்கின்றனர்.

எனினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை. பொதுமக்கள் எப்படி கஸ்டங்களை அனுபவித்தாலும் ராஜபக்ஷர்களைப் பாதுகாப்பதே தனது கடமை என்ற அடிப்படையிலேயே செயற்பட்டு வருகின்றார்.

## கோபுரத்தை இடைநிறுத்த கோரி போராட்டம்

■ எம்.எம்.அஹமட் அனாம்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் செம்மண்ணோடை எம்.பி.சீ.எஸ் வீதியில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் தொலைத்தொடர்பு கோபுரத்தை இடைநிறுத்தக் கோரி சனிக்கிழமை (11) பிரதேச மக்களால் போராட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது.

மக்கள் செறிந்து வாழும் குறித்த பகுதியில் தொலைத்தொடர்பு கோபுரம் அமைப்பதால் பொதுமக்களுக்கு புற்றுநோய் மற்றும் சரும நோய்கள் ஏற்படும் வாய்ப்புகள் உள்ளன என்று தெரிவித்தே இந்த எதிர்ப்பு போராட்டத்தில் பொதுமக்கள் ஈடுபட்டனர்.

தொலைத்தொடர்பு கோபுரம் அமைக்கப்படும் கட்டடத்துக்கு முன்னால் ஒன்று திரண்ட மக்கள், “கோபுரம் வேண்டாம்; அதிகாரிகளே எங்கள் கருத்தைக் கேளுங்கள்” என்ற சுலோகங்களை ஏந்தியவாறு தங்களது எதிர்பினை வெளியிட்டனர்.

## 21 முறைப்பாடுகள் பதிவு

■ எம் எஸ் எம் நூர்தீன்



உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து கடந்த 18.01.2023 ஆம் திகதி முதல் 09.02.2023 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரையிலான காலப்பகுதியில் 21 தேர்தல் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகருமான திருமதிகலாமதி பத்மராஜா தெரிவித்தார்.

இவற்றில் 19 முறைப்பாடுகள் முடிவுறுத்தப்பட்டு உள்ளதுடன் இரு முறைப்பாடுகள் நிறைவுறு த்தப்படாமல் உள்ளதுடன், அவற்றுள் மட்டக்களப்பு மாநகரசபை 04, காத்தான்குடி நகர சபை 02, ஏறாவூர் நகர் நக ரசபை 05, கோறளைப்பற்று மேற்கு 01, கோறளைப்பற்று பிரதேச சபை 01, ஏறாவூர்ப்பற்று பிரதேச சபை 01, மண்முனைப்பற்று பிரதேச சபை 05, மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபை 01, மண்முனை தென் மேற்கு பிரதேச சபை 01 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

அதேவேளை போரதீவுப்பற்று, மண்முனை மேற்கு, வாகரை ஆகிய உள்ளூராட்சி மன்ற பகுதிகளில் தேர்தல் தொடர்ர்பான எதுவித முறைப்பாடுகளும் குறித்த கால எல்லைக்குள் பதிவாகவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

## நாட்டை மீட்பதற்கு சஜித்தே ஒற்றைத் தீர்வு

■ வி.ரி சகாதேவராஜா



முன்னொரு போதுமில்லாத வகையில் நாடு பொருளாதார நெருக்கடியால் அதல பாதாளத்தில் வீழ்ந்துள்ளது. இதனை மீளக்கட்டி எழுப்ப வேண்டுமாக இருந்தால் இன்று இருக்கின்ற ஒரேயொரு தீர்வு சஜித் பிரேமதாஸ மாத்திரமேயாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளரும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸாவின் தமிழ்ப்பிரிவு இணைப்பாளருமான வெள்ளையன் வினோகாந்த் நேற்று (12) ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று (12) ஞாயிற்றுக்கிழமை காரைதீவிலுள்ள அம்பாறை ஊடக மையத்தில் இடம்பெற்றது .

அங்கு அவர் மேலும் கூறுகையில், இம்முறை முதல் தடவையாக ஐக்கிய மக்கள் சக்தி நாட்டில் சகல பாகங்களிலும் தேர்தலில் இறங்கி உள்ளது. ஆளும் கட்சியில் இல்லாமலே தற்போது 70 பாடசாலைகளுக்கு 3,400 இலட்சம் ரூபாய் பெறுமதியான பஸ்களும் 56 வைத்தியசாலைகளுக்கு 1919 இலட்ச ரூபாய் பெறுமதியான மருத்துவ உபகரணங்களும் வழங்கப்பட்டிருக்கின்றன என்றார்.



## திருக்கோவிலில் வீதி நாடகம்

‘இன மத மொழி வேறுபாடுகளுக்கு அப்பால் நல்லிணக்கத்துக்காக உரத்துப் பேசுவோம் உண்மை பேசுவோம்’ எனும் கருப்பொருளில் பொதுமக்களை விழிப்புணர்வூட்டும் வகையிலான வீதி நாடகம் (09) வியாழக்கிழமை திருக்கோவில் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

(வி.ரி சகாதேவராஜா)

## கத்திக்குத்தில் பெண் படுகாயம்

■ எப்.முபாரக்

திருகோணமலை, மஹதிவுல்வெவ பகுதியில் கத்திக்குத்துக்கு இலக்கான நிலையில் பெண்ணொருவர் மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் சனிக்கிழமை (11) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். குறித்த பெண் மஹதிவுல்வெவ பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாய் எனவும் தெரியவருகின்றது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் தனது தாயாரை தாக்கியதன் காரணமாக குறித்த பெண்ணை கத்தியால் குத்தியதாக தெரிவித்து பொலிஸ் நிலையத்தில் சந்தேகநபர் (வயது 28) சரணடைந்துள்ளார்.

இதன்போது கத்திக்குத்துக்கு இலக்கான பெண் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# உக்குவளையில் 82 பேர் போட்டி

■ ஜலீல்

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் உக்குவளை பிரதேச சபைக்கு பதிவு செய்யப்பட்ட பிரதான கட்சிகள் மற்றும் கூட்டமைப்பு கட்சிகளுடன் சுயாதீன குழுக்கள் சார்பில் அபேட்சகர்கள் பலர் களமிறங்கியுள்ளனர்.

இதில், உக்குவளை பிரதேச சபை தவிசாளர் சேத்திய திசாநாயக்க , பிரதி தவிசாளர் நிசார் ராஜாவும் அபேட்சகர்களாக களமிறங்கியுள்ளதுடன் இச்சபையின் ஏனைய உறுப்பினர்களும் புதியவர்கள் (இளைய) சிலரும் பெண்களும் களமிறங்கியுள்ளனர்.

உக்குவளை பிரதேச சபைக்கு 19 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக, இம்முறை 82 பேர் போட்டியிடுகின்றனர்

# உள்ளீர்க்கும் நிகழ்வு

■ நடராஜா மலர்வேந்தன்

தேசிய கல்வி நிறுவகத்தால் ஆசிரியர்களின் வாண்மை விருத்தியை மேம்படுத்துவதற்கான கல்விமாணி கற்கைநெறி (2022 - 2025 ) தொகுதியின் பதுளை பிராந்திய நிலைய ஆசிரியர் மாணவர்களை உள்ளீர்க்கும் ஆரம்ப நிகழ்வு இணைப்பாளர் எஸ். ஜெயகாந்தன் தலைமையில் ஹாலிஎல ஸ்ரீ வீரசக்தி விநாயகர் கோவில் கலாசார மண்டபத்தில் சனிக்கிழமை (11) நடைபெற்றது.

இதன்போது விரிவுரையாளர்கள், (2017 - 2020) தொகுதி ஆசிரியமாணவர்கள், கற்கைநெறிக்கு புதிதாக தெரிவுசெய்யப்பட்டுள்ள ஆசிரியமாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



# “உறவுப்பாலமாக செயற்படுவேன்”

“மலையகத்தில் இந்திய அரசின் நிதி உதவியின் கீழ் முன்னெடுக்கப்படவுள்ள 10 ஆயிரம் தனி வீடுகள் திட்டத்தை விரைவுபடுத்தல் மற்றும் மலையகத்துக்கு சகல வழிகளிலும் உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு மலையக மக்களுக்கும் இந்திய மத்திய அரசுக்கும் இடையில் ஓர் உறவுபாலமாக செயற்படுவேன்“ என பாரதிய ஜனதா கட்சியின் தமிழக மாநில தலைவர் கு. அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள பாரதிய ஜனதா கட்சியின் தமிழக தலைவர் கு.அண்ணாமலைக்கும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உயர்மட்ட குழுவினருக்கும் இடையில் சந்திப்பொன்று இ.தொ.கா தலைமையகமான சௌமிய பவானில் சனிக்கிழமை (11) நடைபெற்றது.



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், தவிசாளர் மருதபாண்டி ராமேஷ்வரன் எம்.பி., பிரதித் தலைவர்களான கணபதி கனகராஜ், அனுஷியா சிவராஜா, தேசிய அமைப்பாளர் ஏ.பி சக்திவேல், உப தலைவர்கள், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதேச சபை தவிசாளர்கள், உட்பட கட்சி பிரமுகர்கள் இச்சந்திப்பில் பங்கேற்றனர்.

அத்துடன், இலங்கை இந்திய சமுதாய பேரவையின் உறுப்பினர்களுக்கும், அண்ணாமலைக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று, அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஏற்பாட்டில் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சில் நடைபெற்றது.

மேற்படி சந்திப்புகளின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் ராமேஷ்வரன், “இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையே சிறந்த உறவு காணப்படுகின்றது. அதேபோல இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கும், இந்திய அரசியல் தலைவர்களுக்கும் இடையிலும் சிறந்த தொடர்பு இருக்கின்றது. அந்தவகையில் இலங்கைக்கு வந்திருந்த பா.ஜ.கவின் தமிழக தலைவர் அண்ணாமலையை சந்தித்து பேச்சு நடத்தினோம்.

இலங்கை கடும் நெருக்கடியை எதிர்கொண்டிருந்த நிலையில், முதல் நாடாக உதவிய இந்தியாவுக்கு காங்கிரஸ் சார்பிலும், மலையக மக்கள் சார்பிலும் நன்றிகளை தெரிவித்தோம்.

அத்துடன், இந்திய அரசின் உதவியின் கீழ் மலையகத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும், மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி திட்டங்கள் பற்றியும் கலந்துரையாடினோம். இதன்போது மலையக மக்களுக்கும் இந்திய அரசுக்கும் இடையில், தான் ஓர் உறவுபாலமாக செயற்படுவேன் என அண்ணாமல் குறிப்பிட்டார்.

# இரண்டு நாள்களில் 44 பேர் கைது

■ சுதத் எச்.எம்.ஹேவா

பல வகையான போதைப்பொருட்களுடன் சிவனொளிபாதமலைக்கு வருகைதந்த 44 பேர் இரண்டு நாள்களில் கைது செய்யப்பட்டுள்ளனர் என ஹட்டன் பிரிவின் குற்ற விசாரணைப் பிரிவின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

10 மற்றும் 11 ஆம் திகதிகளிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களில் 20 பேர், 18 வயதுக்கும் 20 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் எனத் தெரிவித்த அதிகாரிகள், அவர்களை ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றனர்.

# சிவனொளிபாத மலையில் பெண்ணுக்கு பிரசவம்

■ செ.தி.பெருமாள்

இரத்தினபுரி பகுதியில் இருந்து சிவனொளி பாதமலைக்கு சனிக்கிழமை (11) வந்த பெண்ணொருவர் சிசுவொன்றை பிரசவித்துள்ளார்.

32 வயது உடைய உடுவர ஆராச்சிகே நிறுஷா தினுஷா என்ற பெண், நல்லத்தண்ணி நகரில் இருந்து தரிசனம் செய்வதற்கு மலைக்கு ஏறிக் கொண்டு இருந்த வேளையில், ஊசி மலை பகுதியில் வைத்து பிரசவ வலி ஏற்பட்டு, அவ்விடத்தில் குழந்தை ஒன்றை பிரசவித்து உள்ளார்.

அவரது குடும்பத்தினர் அங்கு இருந்து அவசர அவசரமாக நல்லத்தண்ணி பொலிஸார் உதவியுடன் 1990 அவசர அம்புலன்ஸ் மூலம் டிக்கோயா- கிளங்கன் ஆதார வைத்திய சாலைக்கு கொண்டு சென்றனர்.

இது குறித்து கிழங்கன் ஆதார வைத்திய சாலை அதிகாரியிடம் கேட்ட போது தாயும் பெண் குழந்தையும் நலமாக இருக்கின்றனர் என்றனர்.

# ஜெனரல் சஹீர் சம்ஷாத் தலதாவில் வழிபாடு

■ ஷேன் செனவிரத்ன



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பாகிஸ்தான் பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் சஹீர் சம்ஷாத் மிர்சா, கண்டியில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க ஸ்ரீ தலதா மாளிகையில் தரிசனம் செய்தார்.

தலதா மாளிகைக்கு சனிக்கிழமை (11) வருகை தந்த தளபதியை தியவதன நிலமே பிரதீப் நிலங்க தேலா வரவேற்றார். பின்னர் இரு தரப்பினரும் நினைவு பரிசுகளை பரிமாறிக்கொண்டனர்.

# மித்துரோ - மித்துரு புனர்வாழ்வு நிலையம்

■ சிவா ஸ்ரீதரராவ்

போதைப்பொருளுக்கு அடிமையாகிய இளைஞர்களை அதிலிருந்து மீட்டு அவர்களுக்கு புனர்வாழ்வளிக்கப்படும் பெல்மதுளை மித்துரோ - மித்துரு புனர்வாழ்வளிப்பு நிலையத்தால் முதல் தடவையாக ஏற்பாடு செய்யப்பட்ட ‘அக்னி கலாசார நிகழ்வு’ பெல்மதுளை சில்வரே ஹோட்டலில் அண்மையில் இடம்பெற்றது.

நாட்டில் ஐஸ், போதைப்பொருள் மாத்திரை, கொக்கெய்ன் மற்றும் ஏனைய போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியவர்களுக்கு புனர்வாழ்வளித்து அவர்களை சிறந்த நிலைக்கு கொண்டுவருவதற்காக குப்பியாவத்த போதானந்த நாஹிமியால் 1987ஆம் ஆண்டு மேற்படி பெல்மதுளை மித்துரோ - மித்துரு புனர்வாழ்வு நிலையம் ஆரம்பிக்கப்பட்டது.

போதைப்பொருளுக்கு அடிமையாகியவர்களை அதிலிருந்து மீட்டு அவர்களுக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டு வருகின்றமை



குறிப்பிடத்தக்கது.

பெல்மதுளை, கம்பா, பிலியந்தலை ஆகிய பிரதேசங்களில் மேற்படி மித்துரோ - மித்துரு புனர்வாழ்வளிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளதுடன் அதில் போதைப்பொருளுக்கு அடிமையாகிய 400 பேர் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.


இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, கண்டி தலதா மாளிகையின் தியவதன நிலமே பிரதீப் திலங்க தேல பண்டார, ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் மஞ்சுலா இதிகாவெல மற்றும் வைத்திய அதிகாரிகள், வர்த்தக பிரமுகர்கள் உட்பட பெருந்திரலானோர் கலந்து கொண்டனர்.

# வாகன விபத்தில் தந்தையும் மகளும் உயிரிழப்பு

■ மொஹொமட் ஆஸிக்

கண்டி, கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நவயாலதென்ன ஜம்புகஹபிடிய வீதியில் சனிக்கிழமை (11) இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் 14 வயதுடைய மாணவி மற்றும் அவரது 47 வயதுடைய தந்தை ஆகிய இருவரும் உயிரிழந்துள்ளனர் என கட்டுகஸ்தோட்டை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு, ராஜகிரிய பிரசேத்தை சேர்ந்த சிலர் மரண வீட்டுக்கு வந்த வேன், நவயாலதென்னை வீதியைக் நடந்து சென்று கொண்டிருந்த தந்தை மற்றும் மகள் மீது மோதியதில் அவ்விருவரும் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் மேலும்



தெரிவித்தனர்.

தனியார் வகுப்பு ஒன்றில் கலந்து கொண்டுவிட்டு தந்தையுடன் வீடு சென்று கொண்டிருந்த போதே இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் இந்த விபத்தில் பொல்கொலை பிரதேசத்தை சேர்ந்த ரொஹன ஜயந்த என்ற 47 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையும் அவரது இளைய மகளான 14 வயதுடைய மதுஷி மேகலா என்ற மாணவியும் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

இவ் விபத்து தொடர்பாக வேனின் சாரதி கைது செய்யப்பட்டு கண்டி பிரதான நீதவான முன் ஆஜர் செய்யப்பட்டார். அவரை 14 நாள்களுக்கு விளக்க மறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

கட்டுகஸ்தோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கின்றனர்.

# “IMF கடன் கிடைத்தால் டொலரின் பெறுமதி குறையும்”

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் தொகை தவணை முறையில் பெறப்படும் எனவும், அந்தத் தொகை கிடைத்தவுடன் இலங்கையில் டொலரின் பெறுமதி குறைவடையும் எனவும் முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இலங்கைக்கு முதல் கடன் தவணை கிடைக்கும் எனவும், பணம் கிடைத்தவுடன் இலங்கையில் டொலரின் பெறுமதி குறையும். அத்துடன், அதிகரித்துள்ள பொருட்களின் விலைகள் குறைவடையும் எனவும் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இவ்வருட உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நாவலப்பிட்டி நகர சபையில் ஐக்கிய தேசிய கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் நாவலப்பிட்டி நகர சபையில் சனிக்கிழமை (11) நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே மகிந்தானந்த அளுத்கமகே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த மஹிந்தானந்த அளுத்கமகே, நாவலப்பிட்டி நகர சபைக்கு ஐ.தே.க மற்றும் பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகளின் வேட்பாளர்கள் போட்டியிருக்கின்றனர்.

எதிர்வரும் மார்ச் மாதம் (10) நாவலப்பிட்டி மாநகர சபையின் ஆட்சியை அந்த வேட்பாளர்கள் கைப்பற்றுவார்கள் என்றார்.




பல வருடங்களாக மின்கட்டணம் அதிகரிக்கப்படாததால் மின்சார உற்பத்திக்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், நாடளாவிய ரீதியில் பாவனையாளர்களுக்கு போதியளவு எரிபொருள் மற்றும் எரிவாயுவை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலின் மூலம் அரசாங்கத்தை மாற்ற முடியாது எனவும், தற்போதைய அரசாங்கம் இன்னும் இரண்டரை வருடங்கள் ஆட்சியில் இருக்கும் எனவும், தற்போதைய அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.


இப்போதும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் குறைந்துள்ளதால் இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் நாட்டு மக்களின் வாழ்க்கைச் செலவு குறையும் என்றார்.

# கெனில்வேர்த் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

■ சுதத் எச்.எம்.ஹேவா

தங்களுக்கு கிடைக்கவேண்டிய போனஸ், இதுவரையிலும் வழங்கப்படவில்லை எனக் குற்றச்சாட்டிய கினிகத் ஹேன கெனில்வேர்த் தோட்டத் தொழிலாளர்கள், தோட்ட தொழிற்சாலைக்கு முன்பாக சனிக்கிழமை (11) எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை சந்தித்த தோட்ட அதிகாரி,



தொழிலாளர்களுக்கு வழங்கவேண்டிய போனஸை எதிர்வரும் 13ஆம் திகதி வழங்குவதாக உறுதியளித்தார். அதன்பின்னரே, ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

# சமூர்த்தி பயனாளிகள் பெரும் சிரமம்

■ துவாரகஷான்

லிந்துல சமூர்த்தி வங்கியில் முதியோர்களுக்கான கொடுப்பனவு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றது. கொடுப்பனவை பெற்றுக் கொள்வதற்கு தகுதியான சிரேஷ்ட பிரஜைகள் டயகம, அக்கரப்பத்தனை மன்றாசி உள்ளிட்ட பிரதேசத்திலிருந்து 21 கிலோமீற்றர் தூரம் செல்ல வேண்டியுள்ளது.

போக்குவரத்துக்கு அதிக பணம் செலவு செய்து இக்கொடுப்பனவை பெற்றுக் கொள்ள சென்றாலும் சமூர்த்தி காரியாலயத்தில் தொழில் புரியும் அதிகாரிகள் மற்றும் கள உத்தியோகஸ்தர்களின் நடவடிக்கைகளால் பயனாளிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

பார்வை குறைந்தவர்கள், நோயாளர்கள் நடக்க முடியாதவர்கள் அனைவரும் சமூர்த்தி வங்கி சேவையைப் பெற்றுக்கொள்ள வருகின்றனர்.

அந்தவகையில் காலை முதல் மாலை வரை வீதிகளில் அமர்ந்து பசி பட்டினியுடன் காத்திருப்பதோடு தாகத்தை தீர்ப்பதற்கு குடிநீர் வசதியும் இல்லையென சுட்டிக்காட்டுக்கின்றனர்.

சில அதிகாரிகள் மக்களை தரக் குறைவாக பேசுவதாக பயனாளிகள் கூறுகின்றனர். வங்கியில் வழங்கப்படும் பணத் தொகையை எவ்வளவு என்று கேட்டாலும் அதற்கு சரியான பதில் கூறாமல்



ஆக்ரோசத்துடன் பேசி மனம் நோகும்படி நடந்து கொள்வதாக இவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அரசாங்க உத்தியோகத்தர்கள் மக்களுக்கு அரச சேவைகளை சரியான முறையில் வழங்குவதற்காகவே நியமிக்கப்பட்டுள்ளார்கள். அதனை மக்களுக்கு சரியாக வழங்காமல், “நாங்கள் அரச அதிகாரிகள்; எதையும் செய்யலாம்; எங்கு சென்று முறையிட்டாலும் அதை நாங்கள் பார்த்துக் கொள்கின்றோம்” என்று அதிகாரிகள் கூறுவது எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாத விடயம் என பயனாளிகள் கூறுகின்றனர்.

இங்கு காணப்படும் குறைபாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்து, அமர்ந்திருந்து கொடுப்பவை பெற்றுக் கொள்வதற்கு வசதி வாய்ப்புகளை செய்து தருமாறும் அதிகாரிகள் தம்மை இழிவாக வழிநடத்தாமல் மனிதநேயத்துடன் தமக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும். உதவிகளை வழங்க வேண்டுமென பிரதேச மக்கள் சமூர்த்தி அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

# அமைச்சர் கெஹலியவுக்கு எதிராக தேர்தல் முறைப்பாடு

■ ஷேன் செனவிரத்ன

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, அரச வளங்களை துஷ்பிரயோகம் செய்து, தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார் என்று ஹெலிகொப்டர் சின்னத்தில் போட்டியிடும் சுதந்திர மக்கள் முன்னணியின் தலைவரும் எம். பியுமான யாப்பா பண்டார, உதவி தேர்தல் அதிகாரியிடம்



எழுத்துமூலம் முறைப்பாடு செய்துள்ளார்.

அரசியல மைப்பின் பிரகாரம் சகலருக்கும் சமமான முறையில் செயற்படுவதற்கு அதிகாரம் உள்ளது. எனினும், அமைச்சர் கெஹலிய, அரச வளங்களை துஷ்பிரயோகம் செய்துவருகின்றார். அவருக்கு வளங்கப்பட்டுள்ள அரசாங்கத்துக்கு சொந்தமாக வீட்டை, தேர்தல் பிரசாரத்துக்கு பயன்படுத்து கின்றார் என்றும் அந்த முறைப்பாட்டில் தெரிவி க்கப்பட்டு உள்ளது.

# ஒரு பானையும் அரசாங்கத்தின் இரண்டு அகப்பைகளும்

சுதந்திர தினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்தி வடக்கு, கிழக்கில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் இடம்பெற்றன. அதில் பங்கேற்றிருந்தவர்களில் ஒருசிலரை பொலிஸார் விசாரணைக்கு அழைத்துள்ளனனர்.

ஆனால், அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக தென்னிலங்கையில் முன்னெடுக்கப்படும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளில் பங்கேற்பவர்களில் ஒருசிலரை தவிர முக்கியஸ்தர்கள் எவரும் இவ்வாறு விசாரணைக்கு அழைக்கப்படுவதில்லை. ஏற்கெனவே கூறியதுபோல, ஒருநாட்டுக்குள் இரண்டு சட்டங்கள் அமல்படுத்தப்படுகின்றன என்பதற்கு இவையே சிறந்த உதாரணங்களாகும்.

இந்நிலையில், இந்திய அரசின் 1,350 கோடி ரூபாய் நன்கொடையில் யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 'கலாசார மத்திய நிலையம்' சனிக்கிழமை (11) முற்பகல் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நல்லிணக்கம், அபிவிருத்தி மற்றும் கலாசாரம் என்பனவே அரசாங்கத்தின் கொள்கையாகும் என தெரிவித்திருந்தார்.

அத்துடன், நாட்டு மக்கள் சகோதரத்துவத்துடன் ஒன்றிணைந்து நாட்டை கட்டியெழுப்ப வேண்டுமென அழைப்பு விடுத்துள்ளார். ஒரு பானையில் இருந்து இரண்டு வெவ்வேறு அகப்பைகளை கொண்டு பகிர்வதைப் போலவே, இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகள் இருக்கின்றன.

ஜனாதிபதி தலைமையிலான இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளை 'தொட்டிலையும் ஆட்டிவிட்டு பிள்ளையையும் கிள்ளிவிடும்' செயலாகவே இருக்கின்றன என பலரும் விமர்சனங்கள் முன்வைத்துள்ளனர்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பிலான ஜனாதிபதியின் அறிவிப்பும் அதன்பின்னரான பிரசாரங்கள், விமர்சனங்கள், தென்னிலங்கை பெரும்பான்மை சிங்கள மக்களின் நாடி நரம்புகளை முறுக்கேற்றி, இரத்தத்தை சுடாக்கியுள்ளது.

இதற்கு முக்கியமான காரணம் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பிலான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் திடீர் அறிவிப்பாகும். இல்லையேல், மக்கள் 13ஐ ஒரு தொனிப்பொருளாக எடுத்து, விமர்சனங்களுக்கு உட்படுத்தி இருக்கமாட்டார்கள்; மக்களின் தேவையும் அதுவாக இல்லை.

கிடைத்த சகல வழிகளுக்குள்ளும் நுழைந்து மக்கள் சுரண்டிக்கொண்டிருக்கும் அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் கொஞ்சம், கொஞ்சமாக கிளர்ந்தெழ தொடங்கியுள்ளனர். அதிலிருந்து தப்பிக்கவே, இனங்களுக்கு இடையில் முறுகலை ஏற்படுத்துவதற்காக 13ஐ தூக்கிபோட்டுள்ளனர். இறுதியில் சகல இனங்களையும் ஒன்றிணையுமாறு அழைப்பு விடுத்துள்ளார் ஜனாதிபதி.

உண்மையாக சொல்லப்போனால், தென்னிலங்கையில் இருக்கும் கடும்போக்கு சிந்தனைகொண்ட பேரினவாதிகளை இனங்கண்டு அவர்களுக்கு புனர்வாழ்வளித்து, தீய சிந்தனையை களையவேண்டும். 'இது நமது நாடு, நாமெல்லாம் ஒன்றுமையாக, ஒன்றாக கைகோர்க்கவேண்டும்' எனும் தொனிப்பொருளை தென்னிலங்கையில் விதைக்கவேண்டும்.

எனினும், இனங்களுக்கு இடையில் குரோதங்களை ஏற்படுத்தி, அதில் குளிர்காய்ந்து, வாங்கு வங்கிகளை நிரப்பிக்கொள்ளும் பேரினவாதிகள், அதே பல்லவியை மீண்டும் கையிலெடுத்துள்ளமை வெட்கி தலைகுனியச் செய்துள்ளது. இவ்வாறான பிற்போக்கு சிந்தனைக்கு முற்றுப்புள்ளி வைக்காமல், நாட்டின் அபிவிருத்திக்காக என்னதான் புதிய, சிந்தனைகளை விதைத்தாவும் அவையெல்லாம் செல்லாகாசாகிவிடும் என்பது மட்டுமே உண்மையாகும்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

குடும்ப உறுப்பினர்களிடையே பொய்களைத் தாராளமாக உபயோகித்தால், அந்தக் குடும்பத்தில் நிம்மதி கிட்டாது. எதையும் ஒளித்து மறைப்பது, வெளிப்படைத் தன்மையின்றிப் பழகினால், அவர்களிடம் உண்மைத் தன்மையே அற்றுப்போய்விடும்.

ஒருவரை ஒருவர் நம்பாமல் நடந்தால், அவர்களிடம் கோபதாபம் தானாகவே வந்துவிடும். குடும்பத்தின் எல்லா உறுப்பினர்களும் மனம்விட்டுப் பேசவேண்டும். இதனால் குடும்ப உறவு மேலோங்கும்.

குடும்ப உறவு ஒரு பரம்பரையுடன் முடிவதில்லை. எதிர்காலத்துடன் வளர்ந்து செழிக்க வேண்டிய பந்தங்கள். குடும்ப உறவுகளைச் சிதைக்கக்கூடாது. வீட்டில் உள்ள பிள்ளைகளுடன் நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும். பொய்களைப் பேசி அவர்களை ஏமாற்றலாகாது.

கல்வி கற்றலில் மட்டுமல்ல; ஒழுக்க நெறி, பக்தி மார்க்கம், பெரியோர்களை மதித்து நடத்தல் என்பவை இளமைப் பராயத்திலேயே ஊட்டப்பட வேண்டும்.

குடும்பங்கள் எல்லாம் இணைந்ததே, இந்தப் பரந்த உலகம். தனித்து வாழ்வது அல்ல; பொறுப்பு, நம்பிக்கையுடன் வாழ்க்கையை அமைத்தால், அது போல் இன்பம் வேறேது?

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# 13உம் இனவாதமும்




என்.கே அஷோக்பரன்
Twitter: @nkashokbharan


ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனத்தின் மீதான விவாதத்தில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் அல்லது 13+ இனப்பிரச்சினைக்கு தீர்வாக அமையாது என்று அறுதியிட்டு ஜே.வி. பியின் மிக நீண்டகால நிலைப்பாட்டை மீள வலியுறுத்திக் கருத்துரைத்திருந்தார்.

1978ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியலமைப்புச் சட்டமோ அல்லது அதில் கொண்டுவரப்பட்ட திருத்தங்களோ மக்கள் வாக்கெடுப்பின் மூலம் அங்கிகரிக்கப்படவில்லை என்ற அநுர குமார, வடக்கு மற்றும் தெற்கில் உள்ள மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் புதிய அரசியலமைப்பின் மூலமே இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்துவேன் என்று ஜனாதிபதி ரணில் தட்டிவிட்ட பொறி, இனவாதிகளைப் பற்றிக்கொண்டு, மீண்டும் இனவாதிகளும் இனவாதக் கருத்துகளும் அரசியல் முன்னரங்கில் தலைதூக்கத் தொடங்கியுள்ளன.

13ஐ பௌத்த பிக்குகள் எதிர்ப்பது என்பது புதுமையானதல்ல. அவர்கள் அன்றும் அதை எதிர்த்தார்கள்; இன்றும் எதிர்க்கிறார்கள். இதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. ஜே.வி.பியும் அது போலத்தான். அவர்களும் அன்று மிகக் கடுமையாக 13ஐ எதிர்த்தார்கள். 13இன் கீழ் முதலாவது மாகாண சபைத் தேர்தல் நடந்தபோது, பெரும் வன்முறைத் தாக்குதல்களை ஜே.வி.பி என்ற பயங்கரவாத இயக்கம் நடத்தியிருந்தது.

ஆயுதங்களை விடுத்து, அவர்கள் ஜனநாயக நீரோட்டத்தல் கலந்துகொண்ட பின்னர் கூட, ஜே.வி.பி தன்னை மிகப் பெரும் 'சிங்கள-பௌத்த' இனவாத சக்தியாகவேதான் முன்நிறுத்தியது, இதைப்பற்றி முன்னைய பத்திகளில் விரிவாக எழுதியுள்ளேன்.

அவர்கள் தொடர்ந்தும் 13ஐ மட்டுமல்ல; தமிழர்களுக்கான எந்தவோர் அதிகாரப் பகிர்வையும் கடுமையாக எதிர்த்தே வந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் படி, ஒன்றிணைந்த வடகிழக்கு மாகாணங்களைப் பிரிக்கவேண்டும் என உயர்நீதிமன்றம் வரை சென்று வழக்காடி, வடக்கு-கிழக்கை பிரித்தவர்கள் ஜே.வி.பியினர்தான்.

அரசியலுக்காக இனவாதத்தைப் பயன்படுத்தும் ஒருதரப்பு, இலங்கை அரசியலில் இருக்கிறது. அவர்களுக்கு இனவாதம் என்பது வாக்குகளைப் பெறும் ஒரு கருவி. ஆனால், மிக அடிப்படையிலே இனவெறிகொண்ட, தமது இரத்தம், நாடி, நாளங்கள் என எங்கும் இனவெறி ஊறிய, ஒவ்வொரு செல்லிலும் இனவாதம் நிறைந்த ஓர் அமைப்புக்களில் ஜே.வி. பியிற்கு நிலையான இடமிருக்கிறது. ஜே.வி.பி-யிற்கு தலைவராக அநுர குமார வந்தால் என்ன, முனைவர் ஹரிணி அமரசூரிய வந்தால் என்ன, யார் வந்தாலென்ன அந்த இனவெறி மாறாது.

இந்த இடத்தில், இல்லையே அநுர குமார 13ஐ தானே எதிர்க்கிறார். சர்வசனவாக்கெடுப்பில் மக்களுடைய அங்கிகாரத்தைப் பெறும் புதிய தோர் அரசியலமைப்பை அநுர குமார எதிர்க்கவில்லையே என சில வினவலாம். இங்கேதான் அநுர குமார எனும் பேச்சில் வல்லோனின் வாய்ஜாலத்தைத்தாண்டி நாம் சிந்திக்க வேண்டியதாகவிருக்கிறது.

அநுர சர்வசனவாக்கெடுப்பில் அங்கிகாரம் பெறுவதுதான் ஓர் அரசியலமைப்புக்கான அங்கிகாரமாக நிறுவ விளைகிறார். இதைவிடப் பெரிய பெரும்பான்மைவாதம் இருக்க முடியாது. சர்வசனவாக்கெடுப்பில் அங்கிகாரம் என்பதன் அர்த்தம் என்ன? நாட்டிலுள்ள வாக்காளர்கள் அனைவரிலும் பெரும்பான்மையானோரின் அங்கிகாரம்; அதாவது 50%ற்கு அதிகமானவர்களின் அங்கிகாரம். 25 சதவீதமளவுக்கு சிறுபான்மையினரைக் கொண்டதோர் இலங்கை போன்ற பேரினவாதம் நிறைந்த நாட்டில், பெரும்பான்மையினருக்கு சாதகமானதும், சிறுபான்மையினருக்கு எதிரானதுமானதோர் அரசியலமைப்பை, 50 சதவீத அங்கிகாரத்தோடு நிறைவேற்ற முடியாதா என்ன?

பெரும்பான்மையினர்களில் மூன்றிலிரண்டு பேர் அங்கிகரித்தாலே போதும்; ஒரு சிறுபான்மையின வாக்கும் இல்லாமலும், பெரும்பான்மையினரில் மூன்றிலொரு பங்கினரின் வாக்குகள் இல்லாமலும் சர்வசனவாக்கெடுப்பில் அங்கிகாரமொன்றை இலகுவில் வென்றுவிட முடியும். இது ஜே.வி.பியிற்கு நன்றாகவே தெரியும்.

ஜே.வி.பி என்பது ஒரு பேரினவாத சக்திதானே! அது சொல்லியா தெரியவேண்டும் என்பவர்களுக்கு புரிய வேண்டிய விடயம் ஒன்றுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில், குறிப்பான அநுர குமார, ஜே.வி.பி தலைவரான பின்னர், ஜே.வி.பி தனது பழைய பயங்கரவாத, இனவாத வரலாறு தெரியாத புதிய இளம் வாக்காளர்களைக் கவர்வதற்காக தன்னை ஊழலுக்கு எதிரான சக்தியாக, நல்லாட்சியை வழங்கு இரட்சகனாக முன்னிறுத்த விளைகிறது.

அதற்கான அதனுடைய பகீரதப் பிரயத்தனங்களில் ஒன்றுதான் ஜே.வி.பி என்ற பெயரை மாற்றி என்.பி.பி என்ற புதிய முகமூடியை அணிந்துகொண்டமையாகும். அதுபோல, கொழும்பின் உயர்குழாமிடையே தமது செல்வாக்கை அதிகரித்துக்கொள்ள முனைவர் ஹரிணி அமரசூரியவுக்கு தன்னுடைய தேசிய பட்டியல் ஆசனத்தை வழங்கியமை, மற்றும் கொழும்பு உயர் குழாமினரிடையே பிரபல்யம் பெறும் வகையிலானவர்களை என்.பி.பியின் பிரசார முன்னரங்கிற்கு கொண்டு வந்தமை என தனது பயங்கரவாதமும் இனவெறியும் நிறைந்த கடந்தகாலத்தை மறைப்பதற்கு ஜே.வி.பி கடுமையாக முயல்கிறது.

ஆனால், என்.பி.பி என்ற முகமூடியை அணிந்துகொண்டாலும், அலங்காரத்துக்காக கொழும்பின் உயர்குழாமினர் சிலரை முன்னரங்கில் வைத்திருந்தாலும், என்.பி.பியின் ஆன்மாவும் உடலும் இதயமும் தசையும் இரத்தோட்டமும் எல்லாம் அதே பழைய பயங்கரவாதமும் இனவாதமும் நிறைந்த ஜே.வி.பிதான். அவர்கள் தங்கள் கொள்கையில் கொஞ்சமும் மாறுபடவில்லை என்பதைத்தான் அநுர குமாரவின் பேச்சும் அப்பட்டமாக வெளிக்காட்டி நிற்கிறது. இந்த என்.பி.பி மாயைக்குள் தமிழர்களும் சிறுபான்மையினரும் விழுந்துவிடக்கூடாது.

மறுபுறத்தில், 13ஐப் பற்றி சஜித் பிரேமதாஸ இன்னும் வாய் திறக்கவில்லை. ஜே.வி.பியிற்கு எப்படிப் பார்த்தாலும் சிறுபான்மையின வாக்குவங்கி என்று ஒன்று கிடையாது. ஆனால், சஜித்தின் 'சமகி ஜன பலவேகய'வைப் பொறுத்தவரையில் கணிசமானளவு சிறுபான்மையின வாக்குகள் உண்டு. ஆகவே, இது போன்ற விடயங்களில் எந்த நிலைப்பாட்டையும் வெளிப்படையாக எடுக்க முடியாத நிலை அவர்களுக்கு இருக்கிறது.

இவர்களும் மேற்சொன்ன ஜே.வி. பி அளவிற்கு ஆபத்தானவர்கள்தான். சஜித் பிரேமதாஸ எந்த வகையில் ராஜபக்‌ஷர்களிலிருந்து வேறுபட்டவர் என்பதில் எந்தத் தெளிவுமில்லை.

சிறுபான்மையினரின் அரசியல் அபிலாஷைகள் தொடர்பில் அவரது நிலைப்பாட்டுக்கும் ராஜபக்‌ஷர்களின் நிலைப்பாட்டுக்கும் என்ன வித்தியாசமிருக்கிறது. இருவரும், "அனைவருக்குமான சம உரிமை; இது அனைவருக்குமான நாடு; அனைவரும் ஒருதாய் மக்கள்" என்ற வாய்ஜாலத்தை முன்வைக்கிறார்களேயன்றி, அதனைத்தாண்டியதொரு காத்திரமான அதிகாரப்பகிர்வு தொடர்பான உறுதியை வழங்க ராஜபக்‌ஷர்களும் தயாரில்லை; சஜித்தும் தயாரில்லை. ஏனென்றால், இருவருக்குமே பெரும்பான்மையின வாக்குகள் தேவை.

அப்படியானால், ஜனாதிபதி ரணில் மட்டும் என்ன மேலா? இன்று இந்த சூழலில் 13ஐப் பற்றிய வாதத்தை இழுத்துவிட்டு 'நரித்தனம்' ஆடுகிறார் என்றும் சிலர் கேட்கலாம்.

13ஆம் திருத்தம் கொண்டுவரப்பட்ட நாளிலிருந்து இன்று வரை, இலங்கையின் எந்த ஜனாதிபதி, அனைத்துக் கட்சிகளின் முன்பும் பகிரங்கமாக, நான் 13ஐ முழுமையாக அமல்படுத்தப் போகிறேன் என்று சொல்லியிருக்கிறார்? சரி, அவர் 'நரி'த்தனத்திற்காக சொன்னார் என்றே எடுத்துக்கொள்வோம். அந்த நரித்தனம் தமிழ் மக்களுக்கு ஒன்றை மிக உறுதியாக உணர்த்தியிருக்கிறது.

கடந்த வருடம் 'அறகலய' எழுந்தபோது அதில் மக்களின் உரிமைகளைப் பற்றிப் பேசிய குரல்களெல்லாம், 13ஐ அமல்படுத்துவோம் என்றதும் பம்முகிறது; அல்லது, அதை எதிர்க்கிறது. இதுதான் 'அறகலய'வின் உண்மை முகம். கோட்டாவை விரட்ட எழுந்ததுதான் 'அறகலய'. அந்தளவில் அது வரலாற்றுச் சிறப்புமிக்கதொரு மக்கள் எழுச்சி. அதனைத்தாண்டி அதற்கு வேறு முக்கியத்துவமெல்லாம் கிடையாது.

இலங்கை இன்றும் இனரீதியில் பிளவடைந்தே இருக்கிறது. இதைச் சொல்வதற்கு நான் வருத்தப்படுகிறேன். ஆனால் இதுதான் உண்மை. ஓர் 'அறகலய' இதனை மாற்றிவிடவில்லை. இவர்கள் சொன்ன 'சிஸ்டம் சேன்ஞ்'க்குள் சிறுபான்மையினருக்கு இடமில்லை என்பதுதான் நகைமுரண். அதை ஜனாதிபதி ரணில் நாசூக்காக உணர்த்தியிருக்கிறார்.

## கடிதங்கள்

### அறுவடைக்குத் தயார்நிலை:

## நெல் வயல்களை அழிக்கும் யானைகள்

அம்பாறை மாவட்டத்தில் அறுவடை செய்யப்படவுள்ள நெல் வயல்களை, காட்டு யானைகள் தேசப்படுத்தி வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

பொத்துவில், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை ஆகிய எல்லைப் பிரதேசங்களில் செய்கை பண்ணப்பட்ட நெற் செய்கையை, மாலை வேளையில் வரும் யானைக் கூட்டம், அறுவடை செய்யவுள்ள நெல் வயல்களை தேசப்படுத்தி வருகிறது. அத்துடன், ஒலுவில், அஷ்ரப் நகர், சம்புநகர், ஹிறாநகர், ஆலிம்நகர் ஆகிய பிந்தங்கிய பிரதேசங்களிலும் யானைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரவு நேரங்களில் மின்சாரம் தடைப்படுவதால், எல்லைக்கிராமங்களில் வாழும் மக்கள் பீதியின் காரணமாக, மாலை நேரங்களில் தங்கள் குடியிருப்பை விட்டு வெளியேறி, தங்கள் குழந்தைகளுடன் பாதுகாப்பான இடங்களுக்கும் சென்று, காலையில் வீடு திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்கள், பெண்கள், சிறுவர்கள், நோயாளர்கள் போன்றோர் இத்தகைய நிலைமையால் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இரவு நேரங்களில் கிராமங்களுக்குள் புகும் யானைக் கூட்டம், வீட்டுத் தோட்டங்களையும் சேனைப் பயிர்களையும் சேதப்படுத்தி வருவதால், விவசாயிகள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர். எனவே, அம்பாறை மாவட்டத்தில் அதிகரித்துக் காணப்படும் காட்டு யானைத் தொல்லையை கட்டுப்படுத்துவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

–ஹனிபா

# CICRA Campus இனால் Melbourne Polytechnic Bachelor of Business Pathway Programme கற்கைநெறி

CICRA Campus, இலங்கையில் வணிக இளங்கலை கற்கைநெறியை (Bachelor of Business) வழங்க, அவுஸ்திரேலியாவின் தொழில்நுட்ப மற்றும் உயர்கல்வி (TAFE) வழங்குனர்களில் ஒன்றான Melbourne Polytechnic உடன் கைகோர்த்துள்ளது. அதன்படி, CICRA Campus ஆனது Melbourne Polytechnic இன் சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பாடலுக்கான முழுமையான அங்கிகாரம் பெற்ற Certificate IV ஐ இலங்கையில் தனித்த கற்கைநெறியாக அமையும் வகையில், சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பாடல் டிப்ளோமாவை இலங்கையில் வழங்கும்.

மேற்குறிப்பிட்ட கூட்டாண்மைக்கு AusEduco Melbourne அனுசரணையளிக்கிறது.

"சா/த பெறுபேறுகளைக் கொண்டுள்ள மாணவர்கள் இப்போது CICRA Campus இல் Pathway Programme கற்கைநெறியை பூர்த்தி செய்ய முடியும் என்பதுடன், அவுஸ்திரேலியாவில் உள்ள Melbourne Polytechnic இல் Bachelor of Business 2 ஆம் வருட கற்கைக்கான நேரடி நுழைவைப் பெற முடியும்" என்று CICRA Campus இன் குழும பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான போஷன் தயாரத்ன கூறினார்.

"Bachelor of Business pathway கற்கைநெறியானது, அவுஸ்திரேலியாவில் கல்வி கற்க விரும்பும் மாணவர்களுக்கு அவர்களது நேரத்தையும் பணத்தையும் மிச்சப்படுத்துவதுடன், இலங்கையில் தொழில் முன்னேற்றத்திற்கான தொழில்சார் நன்மைகளையும் வழங்குகிறது" என்று தயாரத்ன தொடர்ந்தும் கூறினார்.

Bachelor of Business pathway programme ஆனது சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பாடலில் ஒரு சான்றிதழ் நிலை மற்றும் டிப்ளோமா நிலை கற்கையைக் கொண்டுள்ளதுடன், இது துரிதப்படுத்தப்பட்ட கற்கைமுறையில் ஒரு வருட காலத்திற்குள் பூர்த்தி செய்யலாம். சான்றிதழ் மற்றும் டிப்ளோமா ஆகிய இரண்டும் அவுஸ்திரேலிய தகைமைக் கட்டமைப்பின் கீழ் முழுமையான அங்கிகாரம் பெற்றவை.

CICRA Campus இல் pathway programme கற்கைநெறியை பூர்த்தி செய்த மாணவர்கள், சர்வதேச மாணவர் விண்ணப்பதாரர்களுக்கு அவுஸ்திரேலிய அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட விசா மற்றும் நிதியியல் தகைமை நிபந்தனைகளுக்கு அமைவாக Melbourne Polytechnic இல் கற்பதற்கு விண்ணப்பிக்க முடியும். மேலும் தற்போதைய அவுஸ்திரேலிய குடிவரவு விதிமுறைகளுக்கு அமைவாக, இரண்டு வருட கால பட்டப்படிப்பை பூர்த்தி செய்கின்ற மாணவர்கள், படிப்பிற்கு பின்னர் மூன்று வருட வீசாவை பெற்றுக்கொள்வதுடன், அவுஸ்திரேலிய குடியுரிமையைப் பெற்றுக்கொள்ள இது வழிவகுக்கும்.

"CICRA Campus உடன் இணைந்து பணியாற்றுவதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். இலங்கை மாணவர்கள் அவுஸ்திரேலியாவில் கல்வி கற்கவும், தொழில் சம்பந்தமான தகைமையைப் பெறவும் அவர்களின் கனவுகளை முன்னெடுக்க உதவுவதற்கு ஆவலாக உள்ளோம்" என்று Melbourne Polytechnic இன் பிரதம நிறைவேற்று அதிகாரியான பிரான்சிஸ் கொப்போலிலோ தெரிவித்தார்.

CICRA Campus உடனான உடன்படிக்கையைச் கைச்சாத்திடும் நிகழ்வில் உரையாற்றிய சர்வதேச அபிவிருத்திக்கான துணைத் தலைவரான டிம் கில்பேர்ட், Melbourne Polytechnic ஆனது இலங்கை மாணவர்கள் அவுஸ்திரேலியாவில் அவர்களின் கனவுகளை அடைவதற்கு வழிகோலுவதிலும் அவர்களின் இலங்கைத் தொடர்புகளுக்கு மதிப்பளிப்பதிலும் நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

Melbourne Polytechnic ஆனது 1912 ஆம் ஆண்டு முதல் தொழில் பயிற்சியை வழங்கி வருவதுடன், அவுஸ்திரேலியாவின் விக்டோரியாவில் உள்ள மிகப்பெரிய தொழில் பயற்சிய வழங்குநர்களில் ஒன்றாகும். 2014 ஒக்டோபரில், இந்த கல்வி நிறுவனத்திற்கு அதன் தற்போதைய பெயர் சூட்டப்பட்டதுடன், விக்டோரியா அரசாங்கத்தின் 19 மில்லியன் டொலர் மானிய உதவியையும் பெற்றுக்கொண்டது.

Melbourne Polytechnic ஆனது தொழிற்கல்வி மற்றும் பயிற்சிக்கான தேசிய கட்டுப்பாட்டு அதிகார சபையான Australian Skills Quality Authority (ASQA) இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது அவுஸ்திரேலியாவின் Tertiary Education Quality and Standards Agency (TEQSA) இல் உயர் கல்வி வழங்குனராகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது, National Vocational education and training Regulatory (NVR) இல் பதிவுசெய்யப்பட்ட பயிற்சி நிறுவனமாகும் (Registered Training organization - RTO).

இது 300 க்கும் மேற்பட்ட தேசிய அங்கீகாரம் பெற்ற தகைமைகள் மற்றும் 400 க்கும் மேற்பட்ட கல்விமைய அங்கிகாரம் பெற்ற கற்கைநெறிகளை வழங்குவதற்கு அங்கிகாரம் பெற்றது. இந்த கற்கைத்திட்டங்களில் முன்-பயிலுநர் பயிற்சிகள், பயிற்சி, சான்றிதழ்கள், டிப்ளோமாக்கள், மேம்பட்ட டிப்ளோமாக்கள், இணைப் பட்டங்கள், இளங்கலை பட்டங்கள் மற்றும் முதுகலை பட்டங்கள் ஆகியவை அடங்கும்.

Melbourne Polytechnic தனது கற்கைத் திட்டங்களை ஏழு வளாகங்கள் மற்றும் அவுஸ்திரேலியாவின் விக்டோரியா மாநிலத்தின் மெல்பேர்ன் மாநகரிலுள்ள மேலதிக விசேட பயிற்சி மையங்களில் வழங்கி வருகிறது.

# யூனியன் அஷ்யூரன்ஸ் தைப்பொங்கல் கொண்டாட்டம்





யூனியன் அஷ்யூரன்ஸ், கொழும்பிலுள்ள தலைமையகம் மற்றும் யாழ்ப்பாணக் கிளையில் தைப்பொங்கல் விழாவைக் கொண்டாடியிருந்தது. பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் வழங்கும் பல்கலாசார ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநராகத் திகழ்வதையிட்டு நிறுவனம் பெருமை கொள்கின்றது.

நிறுவனத்தின் நிறைவேற்று நிர்வாகக் குழுவினர் மற்றும் ஊழியர்களின் பிரசன்னத்துடன் இந்த வைபவ நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், தைப்பொங்கல் விழாவின் முக்கியத்துவத்தைக் குறிக்கும் பாரம்பரிய அம்சங்கள் பல இந்நிகழ்வில் அடங்கியிருந்தன.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம மக்கள் அதிகாரி இம்தியாஸ் அனீஃவ் கருத்துத் தெரிவிக்கையில், "நிறுவனத்தில் வெவ்வேறு இனங்கள் மற்றும் மதங்களைச் சேர்ந்தவர்கள் மத்தியில் சமத்துவம், ஒருமைப்பாடு மற்றும் ஐக்கியம் ஆகியவற்றை ஊக்குவித்து, சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை யூனியன் அஷ்யூரன்ஸ் மேற்கொள்கின்றது. இந்த அம்சத்தை கவனத்தில் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மற்றுமொரு நிகழ்வாக இது அமைந்திருந்தது" என்றார்.

கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட இலங்கையின் மாபெரும் நிறுவனமான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்சின் அங்கத்துவ நிறுவனமாக யூனியன் அஷ்யூரன்ஸ் திகழ்கின்றது. துறையில் மூன்று தசாப்த கால வெற்றிகரமான சேவையை யூனியன் அஷ்யூரன்ஸ் பூர்த்தி செய்துள்ளதுடன் சந்தை மூலதனவாக்கமாக ரூ. 16.6 பில்லியனைக் கொண்டுள்ளது. ஆயுள் நிதியமாக ரூ. 54.7 பில்லியனையும், 2022 செப்டெம்பர் மாதமளவில் கொண்டிருந்தது. இலங்கையர்களின் கனவுக்கு வலுச்சேர்க்கும் வகையில் இயங்கும் யூனியன் அஷ்யூரன்ஸ், கல்வி, ஆரோக்கியம், பாதுகாப்பு, ஓய்வூதியம் மற்றும் முதலீடு போன்ற ஆயுள் காப்புறுதியுடன் தொடர்புடைய தீர்வுகளை இலங்கையர்ளுக்கு வழங்குகின்றது. நாடளாவிய ரீதியில் பரந்த கிளை வலையமைப்பினூடாக 3000 க்கும் அதிகமான ஊழியர்களைக் கொண்டு இயங்கும் யூனியன் அஷ்யூரன்ஸ், தொடர்ச்சியான தனது ஊழியர்கள், தீர்வுகள் மற்றும் செயன்முறைகள் போன்றவற்றில் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய முன்னேற்றங்களை மேற்கொள்ளும் வகையில் முதலீடுகளை மேற்கொண்ட வண்ணமுள்ளது.

குவாஹாட்டி

# குழந்தை திருமணத்துக்கு எதிராக மாபெரும் போர்

## ஒரு வாரத்தில் 4,135 வழக்குகள் பதிவு; 2,763 பேர் கைது



அசாமில் குழந்தை திருமணத்துக்கு எதிராக மாபெரும் போர் தொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு வாரத்தில் மட்டும் 4,135 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2,763 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் சமுதாய பிரச்சினைகளில் குழந்தை திருமணமும் ஒன்றாகும். குறிப்பாக வடகிழக்கு மாநிலமான அசாமில் சிறுமிகள் பருவம் அடைந்த உடன் திருமணம் செய்து வைக்கும் கொடுமை நீண்ட காலமாக அரங்கேறி வருகிறது. இந்தப் பிரச்சினை தொடர்பாக கடந்த ஜனவரி 23ஆம் திகதி நடைபெற்ற அசாம் அமைச்சரவை கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது. அப்போது குழந்தை திருமணத்துக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதுதொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பை முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா கடந்த 2ஆம் திகதி வெளியிட்டார்.

அவர் கூறும்போது, "அசாமில் வரும் 2026ஆம் ஆண்டுக்குள் குழந்தை திருமணத்தை முற்றிலும் ஒழிக்க திட்டமிட்டுள்ளோம். 14 வயதுக்கு கீழ் உள்ள சிறுமிகளை திருமணம் செய்தோர் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்படும். 14 வயது முதல் 18 வயதுக்கு கீழ் உள்ள சிறுமிகளை திருமணம் செய்தோர் மீது குழந்தை திருமண தடை சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும். இந்த விவகாரத்தில் அனுதாபத்துக்கு இடமில்லை" என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

முதமைச்சரின் உத்தரவைத் தொடர்ந்து கடந்த சில ஆண்டுகளில் நடைபெற்ற குழந்தை திருமணங்கள் குறித்த விவரங்களை அரசு துறைகளிடம் இருந்து பெற்ற அசாம் பொலிஸார் அதிதீவிர நடவடிக்கைகளில் இறங்கினர். கடந்த ஒரு வாரத்தில் மட்டும் குழந்தை திருமணம் தொடர்பாக 4,135 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதுவரை 2,763 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

விஜயாப்புரா

# இரட்டை சகோதரர்களுக்கு செருப்பு மாலை அணிவித்து தண்டனை

கர்நாடக மாநிலம் விஜயாப்புரா (மாவட்டம்) ஹெகதிஹலா கிராமத்தை சேர்ந்தவர்கள் இரட்டை சகோதரர்கள் மராட்டிய மாநிலத்தின் எல்லையோர கிராமத்திற்கு வேலைக்காக சென்றனர். அந்த சமயத்தில் அவர்கள் அந்த கிராமத்தை சேர்ந்த பெண் ஒருவரை கற்பழிக்க முயன்றுள்ளனர்.

இதையடுத்து பொலிஸாரிடம் இருந்து தப்பிக்க அவர்கள் தங்கள் சொந்த கிராமத்துக்கு வந்துள்ளனர். இந்த நிலையில் பெண்ணை கற்பழிக்க முயன்ற சகோதரர்கள் 2 பேரையும் பஞ்சாயத்தார் முன்னிலையில் கிராம மக்கள் நிறுத்தினர்.

அப்போது பெண்ணை கற்பழிக்க முயன்றது தவறு என கூறிய ஊர் தலைவர், இரட்டை சகோதரர்களுக்கு தண்டனை வழங்கினார். அதாவது அவர்கள் 2 பேருக்கும் தலையை மொட்டை அடித்து, கழுத்தில் செருப்பு மாலை அணிவித்து ஊரை வலம் வரை செய்தனர். இதுதொடர்பான வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாக பரபரப்பை ஏற்படுத்தியது.

அந்த வீடியோவை பார்த்த பலரும் பஞ்சாயத்தாரின் இந்த செயலுக்கு ஆதரவு தெரிவித்து கருத்துகள் கூறினர். மேலும் தவறு செய்தவர்களுக்கு தண்டனை வழங்கினாலும், மனித உரிமைகளை மீறிய செயலாக இது கருதப்படுவதாக சிலர் எதிர்ப்பு தெரிவித்து கருத்துகளை பதிவிட்டுள்ளனர்.

ஓசூர்

# காதலர் தினத்துக்கு கைகொடுக்காத ரோஜாக்கள்

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் பகுதியில் நிலவும் குளிர்ந்த தட்பவெப்ப நிலை மலர் சாகுபடிக்கு கைகொடுப்பதால், சுமார் 1,000 ஏக்கர் பரப்பில் பசுமைக் குடில்கள் அமைத்து, தாஜ்மஹால், ரோடோஸ், நோப்ளாஸ், கோல்ட் ஸ்டிரைக், சவரன், அவலாஞ்சி, பெர்னியர் உள்ளிட்ட 8 வகையான ரோஜா சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

ஆண்டுதோறும் கிறிஸ்துமஸ், புத்தாண்டு, காதலர் தினத்துக்கு ஒசூரிலிருந்து ரோஜா மலர்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. குறிப்பாக, காதலர் தினத்தை முன்னிட்டு, தாஜ்மஹால், அவலாஞ்சி ரக ரோஜாக்கள், சிங்கப்பூர், மலேசியா மற்றும் ஐக்கிய அரபு நாடுகளுக்கு 30 இலட்சமும், ஐரோப்பிய நாடுகளுக்கு 10 இலட்சமும் அனுப்பி வைக்கப்படுகின்றன. இந்நிலையில், ஒசூர் பகுதியில் கடந்த டிசம்பரில் பெய்த தொடர் மழையால் ரோஜா செடிகளில் 'டவுனிங்' என்ற நோய்த் தாக்கம் ஏற்பட்டு, மலர் உற்பத்தி கடுமையாகப் பாதிக்கப்பட்டது. மேலும், தரமற்ற ரோஜாப் பூக்கள் கிடைக்கும் நிலை ஏற்பட்டது.

ஏற்றுமதிக்கு ஏற்ற தரம் இல்லாததால், காதலர் தினத்துக்கு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் ரோஜாக்களில், வழக்கத்தைக் காட்டிலும் 60 சதவீத ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், சர்வதேச சந்தையில் புதிய ரகங்கள் அறிமுகம் செய்யப்படும் நிலையில், இந்திய ரோஜாக்களுக்கு வரவேற்பும் குறைந்துள்ளது. இதுகுறித்து விவசாயி முனி வெங்கடப்பா கூறியதாவது: இந்திய ரோஜாவுக்கு வெளிநாடுகளில் வரவேற்பு குறைந்துள்ளது. இதனால், உள்ளூர் விற்பனையை மட்டுமே நம்பியிருக்க வேண்டியுள்ளது. மேலும், போதிய விலையும் கிடைப்பதில்லை என்றார்





புதுடெல்லி

# இந்தியாவில் 90 வகை உருமாறிய கொரோனா

இந்தியாவில் கடந்த 60 நாள்களில் 90 புதிய வகை உருமாறிய கொரோனா வைரசுகள் கண்டறியப்பட்டு உள்ளன என பாராளுமன்ற மக்களவை எம்.பி. மற்றும் மத்திய சுகாதார துறை இணை மந்திரி பாரதி பிரவீன் பவார் தெரிவித்துள்ளார்.

ஒமைக்ரான் மற்றும் அவற்றின் பிற உருமாறிய வகைகள் தொடர்ந்து இந்தியாவில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. அவற்றில் எக்ஸ்.பி.பி., பி.கியூ ஆகியவை நாட்டில் பரவலாக மேலோங்கி காணப்படுகிறது என்று தெரிவித்து உள்ளார்.

சில நாடுகளில் கொரோனா பாதிப்பு எண்ணிக்கை அதிகரிக்க தொடங்கியதும், சீனா, சிங்கப்பூர், ஹாங்காங், கொரியா, தாய்லாந்து மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் இருந்து மற்றும் அந்நாடுகள் வழியே வர கூடிய விமான பயணிகள் கட்டாயம் ஆர்.டி.பி.சி.ஆர் பரிசோதனை சான்றிதழ்களை கொண்டு வருவது அவசியம் என மத்திய அரசு அறிவித்தது என்று பவார் தெரிவித்து உள்ளார்.


உதய்ப்பூர்

# பெண்ணின் ரூ.2 இலட்சத்தை நாசமாக்கிய கறையான்கள்

இராஜஸ்தான் மாநிலம் உதய்ப்பூரின் காலாஜி கோராஜி பகுதியில் பஞ்சாப் நேஷனல் வங்கிக் கிளை உள்ளது. இதில் உள்ள பாதுகாப்பு பெட்டக லாக்கரில் சுனிதா மேத்தா என்பவர் 2 இலட்சம் ரூபாய் நோட்டுகள் மற்றும் சில சொத்து ஆவணங்களை வைத்திருந்துள்ளார்.

சமீபத்தில் வங்கிக்கு சென்ற சுனிதா, பணத்தை எடுப் பதற்காக தனது லாக்கரை திறந்துள்ளார். ஆனால், அங்கு வைக்கப்பட்டிருந்த பணம் மற்றும் சொத்து ஆவணங்களை கரையான்கள் அரித்திருந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

இதுகுறித்து வங்கி மேலாளரி டம் சுனிதா புகார் செய்துள்ளார். இதையடுத்து வங்கி நிர்வாகத்தினர் லாக்கர்கள் மீது பூச்சிக்கொல்லி மருந்தை தெளித்துள்ளனர். மேலும் லாக்கர் சேவை பெறும் வாடிக்கையாளர்களுக்கு தகவல் தெரிவித்து உடனடியாக வங்கிக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளனர். அதன்படி வங்கிக்கு வந்த வாடிக்கையாளர்கள், அதிகாரிகளின் அலட்சியப் போக்கைக் கண்டித்து போராட்டத்தில் ஈடுபட் டுள்ளனர். பின்னர் அதிகாரிகள் அவர்களை சமாதானம் செய்து அனுப்பி வைத்தனர்.



வொஷிங்டன்

# போரை மோடியால் நிறுத்த முடியும்

## அமெரிக்கா நம்பிக்கை

உக்ரேன் மீது ரஷியா கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி போர் தொடுத்தது. இந்தப் போர் தொடங்கி ஓராண்டு முடியப்போகிறது. போர் தொடங்கியபோது, ஒரு வார காலத்துக்கு மேல் நீடிக்காது என்றுதான் உலக நாடுகள் எதிர்பார்த்தன.

ஆனால் ரஷியாவை உக்ரேன் இன்னும் உக்கிரத்துடன் எதிர்த்து போர் நடத்தி வருகிறது. உக்ரேனுக்கு அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் ஆயுதங்கள், தளவாட உதவிகளை செய்து வருகின்றன. இந்தப்போர் உலகளாவிய தாக்கங்களை ஏற்படுத்தி வருகிறது. எனவே போரை முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்ற குரல் ஒலித்து வருகிறது.

பேச்சு வார்த்தைகள் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண




வேண்டும் என்று இந்தியப் பிரதமர் மோடி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

இந்த நிலையில், வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு கவுன்சில் செய்தி தொடர்பாளர் ஜான் கிர்பி, வொஷிங்டனில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அவரிடம், "உக்ரேன் போரை நிறுத்த இந்திய பிரதமர் மோடிக்கு இன்னும் நேரம் இருக்கிறதா அல்லது ரஷிய அதிபர் விளாடிமிர் புட்டினை சமாதானப்படுத்த இன்னும் நேரம் இருக்கிறதா?" என கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு ஜான் கிர்பி பதில் அளிக்கையில் கூறியதாவது:- உக்ரேன் போரை நிறுத்துவதற்கு இன்னும் ரஷிய அதிபர் புட்டினுக்கு நேரம் இருக்கிறது என்று நினைக்கிறேன். இன்னும் அதற்கு நேரம் உள்ளது என்று கருதுகிறேன். பிரதமர் மோடியால் (ரஷிய அதிபர் புதினை) சமாதானப்படுத்த முடியும். என்ன முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறாரோ அதைப் பிரதமர் மோடி பேசட்டும். நாங்கள் போர் இன்று முடிவுக்கு வர முடியும் என கருதுகிறோம். அது முடிவுக்கு வரவேண்டும். உக்ரேன் போரை நிறுத்த மேற்கொள்ளப்படும் எந்த முயற்சியையும் அமெரிக்கா வரவேற்கும் என்றார்

அங்காரா

# முத்தமிட்டு நன்றிக் கடனை வெளிப்படுத்திய பெண்



பூகம்பத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள துருக்கி, சிரியாவுக்கு இந்தியா தாராளமாக உதவி செய்து வருகிறது. 'ஆபரேசன் தோஸ்த்' என்ற பெயரில் இந்தியாவில் இருந்து மீட்புப் படை வீரர்கள், மருத்துவ குழுவினர் இரு நாடுகளுக்கும் சென்றுள்ளனர்.

உத்தர பிரதேசம் ஆக்ராவில் செயல்படும் ராணுவ மருத்துவ மனையை சேர்ந்த மருத்துவர்கள், செவிலியர்கள் நூற்றுக்கும் மேற் பட்டோர் துருக்கி சென்றுள்ளனர். இந்திய இராணுவ மருத்துவ குழு, துருக்கியின் ஹதே நகரில் 30 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையை அமைத்து பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிகிச்சை அளித்து வருகிறது.

அங்கு இந்திய இராணுவ மருத்துவரான கர்னல் யதுவீர் சிங் தலைமையில் 14 மருத்துவர்கள், செவிலியர்கள் உட்பட 86 மருத்துவ ஊழியர்கள் சேவையாற்றி வருகின்றனர்.

ஹதே நகர மருத்து வமனையில் பணியாற்றும் இந்திய இராணுவ மருத்துவர் மேஜர் வீணா திவாரி தன்னுடைய தன்னலமற்ற சேவையால் துருக்கி மக்களின் மனங்களை வெகுவாகக் கவர்ந்துள்ளார். இரவு, பகல் பாராமல் முதியோர், சிறாருக்கு அவர் சிகிச்சை அளித்து வருகிறார். இதைப் பார்த்து நெகிழ்ந்த துருக்கி பெண் ஒருவர், மேஜர் வீணா திவாரியின் கன்னத்தில் முத்தமிட்டு தனது நன்றிக் கடனை, அன்பை வெளிப்படுத்தினார்.

இந்த புகைப்படத்தை இந்திய இராணுவம் வெளியிட்டது. இப்படம் சமூக வலைதளங்களில் வேகமாக பரவி வருகிறது.

அங்காரா

# துருக்கியில் திருடிய 48 பேர் கைது

துருக்கி மற்றும் சிரியா நாடுகளில் கடந்த வாரம் ஓய்வு நாளான ஞாயிற்று கிழமை முடிந்து அடுத்த நாள் விடியல் தொடங்குவதற்கு முன்னரே, சோகம் ஏற்பட்டது. உயிரிழப்புகள் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இரு நாடுகளிலும் மொத்தம் 28 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்து உள்ளனர் என தெரிவிக்கப்பட்டு உள்ளது. ஆனால் பலி எண்ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படுகிறது.

இதனை அடுத்து, பேரிடர் பகுதிகளுக்கு துருக்கி அதிபர் ரீசெப் தயீப் எர்டோகன் சென்று பார்வையிட்டு உள்ளார்.

இந்நிலையில், அனாடொலு செய்தி நிறுவனம் வெளியிட்டு உள்ள செய்தியில், துருக்கியில் நிலநடுக்க பாதிப்புக்கு மத்தியில் திருட்டில் ஈடுபட்ட 48 பேர் கடந்த 4 நாட்களில் கைது



செய்யப்பட்டு உள்ளனர்.

அடுத்த 3 நாட்களுக்கு இந்த கைது நடவடிக்கை தொடரும் என கூறப்படுகிறது. துருக்கி நாட்டின் தென்கிழக்கே 10 மாகாணங்களில், நிலநடுக்கம் எதிரொலியாக, 3 மாத கால அவசரகால நிலையை பிரதமர் எர்டோகன் பிறப்பித்து உள்ளார். இந்த நேரத்தில் திருட்டு சம்பவத்தில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் எர்டோகன் உறுதி கூறினார்.

திருட்டு அல்லது கடத்தலில் ஈடுபடும் மக்கள் அரசின் உறுதியான கரங்களில் இருந்து தப்ப முடியாது என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்று அவர் எச்சரிக்கை விடுத்து உள்ளார்.

துருக்கி

### துருக்கி நிலநடுக்கம்

# நூற்றுக்கணக்கான குழந்தைகளின் பெயர்களை அழித்தது எப்படி?

துருக்கி, சிரியாவில் ஏற்பட்டிருக்கும் பயங்கரமான நிலநடுக்கத்தால் அங்கே மிகவும் அசாதாரணமான சூழல் நிலவி வருகிறது. பேரிடரில் தங்களது பெற்றோர்களை இழந்த பச்சிளம் குழந்தைகள் பலர் தங்களது பெயர் கூட தெரியாமல் நிர்கதியாக நிற்கின்றனர். இப்படி பெயர் தெரியாத சில

குழந்தைகள் தங்களக்கு ஏற்பட்டிருக்கும் இழப்புகள் எவ்வளவு கொடுமையானது என்பதை புரிந்துகொள்ள முடியாத வயதில் இருக்கின்றனர்.

தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒரு ஆறு மாத பெண் குழந்தைக்கு மருத்துவர்கள் புட்டிப்பால் புகட்டிக்கொண்டிருந்ததை நான் பார்த்தேன். அவளது பெற்றோர்களை இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை.

இன்னும் நூற்றுக்கணக்கான



அடையாளம் தெரியாத குழந்தைகள் அங்கே இருக்கின்றனர். அவர்களது பெற்றோர்கள் இறந்திருக்கக்கூடும் அல்லது நிலநடுக்கத்தின் இடர்பாடுகளில் சிக்கி கண்டுபிடிக்க முடியாத நிலையில் இருக்கக்கூடும்.

துருக்கியில் ஏற்பட்ட அந்த நிலநடுக்கம் அவர்களது குடும்பங்களை சிதைத்தது மட்டுமல்லாமல் தற்போது அவர்களது அடையாளங்களையும் பறித்துக் கொண்டது.

தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த மற்றொரு பெண் குழந்தையின் கைகளை மருத்துவர் நர்ஷா கெஸ்கின் இறுகப் பற்றியிருந்தார்.

பேர்லின்

### நிலநடுக்கம் எதிரொலி

# அவசரகால விசாக்களை வழங்குகிறது ஜெர்மனி

துருக்கி மற்றும் சிரியா நாடுகளில். எல்லையில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட வர்களுக்குஉதவிட ஜெர்மனி அரசு முடிவு செய்து உள்ளது. இதன்படி நிலநடுக்கம் பாதித்த துருக்கி மற்றும் சிரியா ஆகிய இரு நாட்டு மக்களுக்கும் 3 மாதங்கள் வரையிலான அவசரகால விசாக்களை வழங்க ஜெர்மனி அரசு முன்வந்து உள்ளது. இதுபற்றி அந்நாட்டு உள்துறை மந்திரி நான்சி பீசர், பில்த் என்ற தினசரி பத்திரிகைக்கு அளித்த பேட்டியின்போது, பேரிடர்



பாதித்த பகுதிகளில் இருந்து தங்களது நெருங்கிய உறவினர்களை ஜெர்மனிக்கு அழைத்து வரும் துருக்கி மற்றும் சிரியா நாட்டு மக்களை ஜெர்மனிக்குள் வர அனுமதிக்க விரும்புகிறோம். அவர்கள் தங்களது குடும்பத்தினருடன் வரலாம். இதற்காக விசா கெடுபிடிகள், அரசு விதிகள் ஆகியவை இருக்காது. இது அவசரகால உதவி என கூறியுள்ளார்.

நிலநடுக்க பாதிப்பில் சிக்கி தவிப்பவர்களுக்கு உதவியாக, இந்தியா போன்ற உலக நாடுகள் மருத்துவ பொருட்கள், குளிர்கால போர்வைகள், விரிப்புகள் உள்ளிட்ட அத்தியாவசிய நிவாரண பொருட்களை விமானங்களில் அனுப்பி வருகின்றன. 20-க்கும் மேற்பட்ட வெளிநாடுகளை சேர்ந்த பேரிடர் நிவாரண படையினர் மீட்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். தொடர்ந்து மீட்பு மற்றும் நிவாரண பணிகள் தீவிரப்படுத்தப்பட்டு உள்ளன.




### கழக உலகக் கிண்ணம்:

# சம்பியனானது றியல் மட்றிட்

சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் கழக உலகக் கிண்ணத் தொடரில், ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்றிட் சம்பியனானது.

மொரோக்கோவில் நேற்று அதிகாலை நடைபெற்ற சவுதி அரேபியக் கழகமான அல்-ஹிலாலுடனான இறுதிப் போட்டியில் 5-3 என்ற கோல் கணக்கில் வென்றே மட்றிட் சம்பியனானது.

மட்றிட் சார்பாக, வின்ஷியஸ் ஜூனியர், பெடெரிக்கோ வல்வெர்டே ஆகியோர் தலா இரண்டு கோல்களையும், கரிம் பென்ஸீமா ஒரு கோலையும் பெற்றனர். அல்-ஹிலால் சார்பாக, லூஸியானோ வியட்டோ இரண்டு கோல்களையும், மூஸா மரெகா ஒரு கோலையும் பெற்றனர்.

### இந்தியத் தொடருக்கான

# அவுஸ்திரேலியக் குழாமுக்கு கூனுமென் அழைப்பு

இந்தியாவுக்கெதிரான டெஸ்ட் தொடருக்கான அவுஸ்திரேலியக் குழாமுக்கு இடதுகை சுழற்பந்துவீச்சாளர் மத்தியூ கூனுமென் அழைக்கப்பட்டுள்ளார்.

குழந்தை பிறப்புக்காக புறச் சுழற்பந்துவீச்சாளர் மிற்செல் ஸ்வப்ஸன் அவுஸ்திரேலியாவுக்குச் செல்கையிலேயே கூனுமென் அழைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், இந்தியாவுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் கூனுமென் விளையாடுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.





### பிரெஞ்சு லீக் 1 தொடர்:

# தோற்ற நடப்புச் சம்பியன்கள்

பிரெஞ்சுக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லீக் 1 தொடரில், மொனாக்கோவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் நடப்புச் சம்பியன்களான பரிஸ் ஸா ஜெர்மைன் 1-3 என்ற கோல் கணக்கில் தோற்றது.

மொனாக்கோ சார்பாக, அலெக்ஸான்டர் கொலோவின், விஸாம் பென் யெடர் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். பரிஸ் ஸா ஜெர்மைன் சார்பாகப் பெறப்பட்ட கோலை வரென் ஸைரே-எமெரி பெற்றார்.

### இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# டொட்டென்ஹாமை வீழ்த்திய லெய்செஸ்டர்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், லெய்செஸ்டர் சிற்றியின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-4 என்ற கோல் கணக்கில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் தோற்றது.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற பிரென்ஃபோர்ட்டுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் சமப்படுத்தியது.

இந்நிலையில், வெஸ்ட் ஹாம் யுனைட்டெட்டின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் செல்சி சமப்படுத்தியது.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 51 புள்ளிகளுடன் ஆர்சனல் முதலாமிடத்திலுள்ளது. 45 புள்ளிகளுடன் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி இரண்டாமிடத்திலும், மன்செஸ்டர் யுனைட்டெட் 43 புள்ளிகளுடன் மூன்றாமிடத்திலும், 41 புள்ளிகளுடன் நியூகாசியில் யுனைட்டெட் நான்காமிடத்திலுள்ளன. இதில், ஆர்சனலும் சிற்றியும் ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளன.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 13 பெப்ரவரி 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.